# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 1978/21 - 2016 අගෝස්තු මස 02 වැනි අඟහරුවාදා - 2016.08.02

*1978/21 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 02 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I)- பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

*ச.வ.பீ. 3/2009*

**2009 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, இலங்கை மின்சார சபைச் சட்டம்**

*2009 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, இலங்கை மின்சார சபைச் சட்டத்தின் 30 (3) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 53 ஆம் பிரிவின் கீழான இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவினால் ஆக்கப்படும் விதிகள்.*

தவிசாளர்,
இலங்கைப் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு.

கொழும்பு,
*2016, யூலை 29.*

விதிகள்

*1.* இவ்விதிகள் 2016 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க, மின்சார (இறுப்பனவுகளின் மீளாய்வு மற்றும் சரிக்கட்டுதல்களுக்கான நடவடிக்கைமுறை) விதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

*2.* உரிமம் பெறுநர் ஒவ்வொருவரும் தனக்கென அனுமதிக்கப்பட்ட வருமானத்தினதும் மற்றும் இறுப்பனவுகளின் மீளாய்வு சீராக்கல்களினதும் அங்கீகாரத்தின் நிமித்தம் ;

(அ) சட்டத்தின் 30 (2) (அ) எனும் பிரிவின் கீழ் குறித்துரைக்கப்பட்டதும் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டதுமான இறுப்பனவு முறையியல்களுக்கும் ; அத்துடன்

(ஆ) கட்டணங்கள் பரிசீலனை மற்றும் சரிக்கட்டுதல் பற்றிய இணங்க ஒரு கட்டணத் தொகுப்பைத் தயாரித்து முன்வைக்க வேண்டும்.

*3.* ஆணைக்குழுவுக்கு ஒரு கட்டணத் தொகுப்பைத் தயாரித்து முன்வைக்கின்ற போது, உரிமம் பெறுநர் ஒவ்வொரு ஆண்டும் அந்தக் கட்டண முறையியலுக்கிணங்க தகவல் தொகுப்புத் தேவைப்பாடுகளில் தரப்பட்டுள்ளவாறான போதிய தகவல்களையும் ஆணைக்குழுவினால் குறித்துரைக்கப்பட்ட படிவங்களிலும் வழங்குதல் வேண்டும்.

4. இறுப்பனவு பரிசீலனை மற்றும் சரிக்கட்டல்கள் ஆணைக்குழுவினது தீர்மானத்திற்கும் அங்கீகாரத்திற்கும் இணங்க நிறைவேற்றப்படுதல் வேண்டும் :-

(i) உரிமம் பெறுநர்கள் தமது வாடிக்கையாளர்களிடமிருந்து சேகரிப்பதற்கு உரித்துடைய அனுமதிக்கப்பட்ட ; அத்துடன்

(ii) உரிமம் பெறுநர்கள் குறித்த பின்னிணைப்பில் காணப்படும் இறுப்பனவுகள் மீளாய்வு சீராக்கல் பற்றிய விரிவான நடைமுறையின் கீழ் தமது அனுமதித்த வருமானத்தை சேகரிப்பதற்கு அனுமதிக்கின்ற ஒவ்வொரு வாடிக்கையாளர் வகுதிக்கும் எனப் பிரயோகிக்கவேண்டிய மானியங்களை கருத்திற்கொள்கின்ற முடிவுப் பயன் வாடிக்கையாளர்களுக்கான கட்டணம் அடங்கிய அட்டவணை ஆகியன தொடர்பில் அத்தகைய இறுப்பனவு மீளாய்வு சீராக்கல் விடயங்கள் மேற்கொள்ளப்பட்டு நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

5. ஆணைக்குழுவானது அந்த பின்னிணைப்பில் தரப்பட்டுள்ள இறுப்பனவு முறையியல் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகினாலன்றி அதனை ஆணைக்குழு அங்கீகரித்தலாகாது.

6. உரிமம் பெறுநரினால் கோரப்படுகின்ற வருமானத்தை ஆணைக்குழு அங்கீகரிக்கவில்லை எனின், ஆணைக்குழுவானது அதற்கான காரணங்களைச் சுட்டிலக்கம் மற்றும் அத்தகைய உரிமம் பெறுநருக்கு கட்டணக் கோப்பிடுதலை திருத்துவதற்கு அறிவித்தலும் வேண்டும்.

7. உரிமம் பெறுநர்கள் அதற்கிணங்க கட்டணத் தொகுப்பினை திருத்துதல் வேண்டும். அனுமதித்த வருமானத்திற்கான கட்டணத் தொகுப்பை அல்லது திருத்திய ஒரு கட்டணத் தொகுப்பை ஆணைக்குழு அங்கீகரிக்கவில்லை எனில், ஆணைக்குழு அந்த அங்கீகரித்த வருமானத்தை அனுமதிக்கும் வரை ஏற்கெனவேயிருக்கின்ற கட்டணம் மாற்றம் பெறாது அவ்வாறே செயல்வலுப்பெற்றதாகவிருக்கும்.

8. அனுமதித்த வருமானத்திற்கான கட்டணத் தொகுப்பை அங்கீகரிப்பதற்கு ஆணைக்குழு மறுப்பதன் விளைவாக, அங்கீகரிக்கப்பட்டு அனுமதித்த அந்த வருமானத்தைப் பார்க்கிலும் அதிகமான அல்லது குறைவான வருமானத்தை உரிமம்பெற்ற கட்சிக்காரர் ஈட்டியுள்ள பட்சத்தில், அனுமதித்த வருமானத்திற்கான திருத்திய ஒரு கட்டணத் தொகுப்பை ஆணைக்குழு அங்கீகரிக்கும் போது, ஆணைக்குழுவானது, அந்த வருமானங்களுக்கும் மற்றும் இணக்கல் செய்யப்படலாம் எனும் அங்கீகரிக்கப்பட்டு அனுமதிக்கப்படும் வருமானத்திற்கும் இடையில் காணப்படுகின்ற வித்தியாசத்தையும் மற்றும் அங்கீகரிக்கப்பட்டு அனுமதித்த தனது வருமானத்தைப் பார்க்கிலும் அதிகமான அல்லது குறைவான வருமானத்தை உரிமம் பெற்ற கட்சிக்காரர் ஈட்டியுள்ள அளவையும் உரிமம் பெற்ற கட்சிக்காரருக்கு அறியப்படுத்தல் வேண்டும்.

9. ஆணைக்குழு, அனுமதிக்கப்பட்ட இறைவரியின் அங்கீகாரத்துடன் இறுப்பனவு காலத்திற்கான முடிவுப் பயன் பாவனையாளர்களுக்கு இறுப்பனவு அட்டவணையை உள்ளடக்குகின்ற இறுப்பனவின் மீது முடிபை அங்கீகரித்தல் வேண்டும்.

10. உரிமம் பெறுநர் அங்கீகரிக்கப்பட்ட ஆகக்குறைந்தது சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் ஒரு தேசிய செய்திப் பத்திரிகையில் வெளியிடுதல் வேண்டும் என்பதுடன் அதே நேரத்தில் முடிவுப் பயன் பாவனையாளர்களுக்கு அந்த இறுப்பனவு அட்டவணை பயனுறுவதற்கு பத்து நாட்களுக்கு முன்னர் அந்தக் கட்டணத் தொகுப்பு பற்றிய விபரங்களை உரிமம் பெறுநருடைய இணையத்தளத்தில் அனுப்புதலும் வேண்டும் :-

11. ஆணைக்குழு, திறைசேரியுடனான ஆலோசனையில் பின்வருவதனை சனவரியின் இறுதி வேலை நாளுக்கு முன்னர் வர்த்தமானியில் ஆண்டுதோறும் வெளியிடுதல் வேண்டும் :-

(அ) அட்டவணைமயப்படுத்தப்பட்ட இறுப்பனவு மீளாய்வு மற்றும் சரிக்கட்டுதல்கள் விபரிக்கப்பட்ட நடைமுறையினால் தாபிக்கப்பட்ட நேர எல்லையுடன் ஒத்துப்போகின்றதான அட்டவணைப்படுத்திய இறுப்பனவு மீளாய்வுகள் மற்றும் சரிக்கட்டுதல்களுக்கான குறித்த திகதிகள் ; அத்துடன்

(ஆ) (i) பொதுமக்களிடம் ஆலோசனைகளைக் கேட்டறிதல் (பொது விசாரணைகள் உள்ளடங்கலாக ஏதேனுமிருப்பின்)

(ii) இறுப்பனவு முறையியலுக்கு இணங்க பொதுமக்களுக்கு தகவல்களைப் பரப்புவதற்கும் ; மற்றும்

(iii) பாவனையாளர்களும் மற்றும் இறுப்பனவு மீளாய்வு மற்றும் பாவனையாளர்களுக்கான சீராக்கல் விடயங்களில் பங்கேற்பதற்கு அக்கறையுள்ள ஏனைய கட்சிக்காரர்களும் பயன்படுத்த வேண்டிய தகவல்களை ;

ஆணைக்குழுவினது உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் பிரசுரிப்பதற்கும் ஏற்றவகையில் பொதுமக்களின் கருத்துக்களைக் கேட்டறிவதற்கான குறித்த திகதிகள் .

12. இவ்விதிகளில் சந்தர்ப்பசூழ்நிலை வேறுவகையில் வேறுபடுத்தினாலன்றி :-

"சட்டம்" என்பது, 2009 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, இலங்கை மின்சாரச் சபை சட்டம் எனப் பொருள்படும் ;

"சரிக்கட்டுதல்" என்பது, ஆகுசெலவு பிரதிபலிப்புக் கட்டண முறையியலில் விவரிக்கப்பட்டுள்ள சீராக்கல் சூத்திரங்களுக்கு (வருமானக் கட்டுப்பாட்டு சூத்திரங்கள்) இணங்க கட்டண காலத்தின் போது, சீராக்கப்படுவதற்கு இருக்கின்ற குறித்த அந்த ஆகுசெலவு பிரதிபலிப்புக் கட்டண முறையியலில் சுட்டிக்காட்டப்பட்டவாறான கட்டணங்களின் ஆக்கக்கூறுகள் ஊடாக நடவடிமுறை எனப் பொருள்படும். இந்தச் சீராக்கல்கள் அந்த ஆகுசெலவு பிரதிபலிப்புக் கட்டண முறையியலில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ளவாறு தகவல்களை அல்லது நுண் பொருளாதாரம் சார் சுட்டிகளின் பிரயோகத்தை அல்லது இரண்டினதும் இணைப்பை முன்வைப்பதற்கு உரிமம் பெற்ற தரப்புகளைத் தேவைப்படுத்தலாம் ;

"அனுமதிக்கப்பட்ட இறைவரி" என்பது, ஒரு ஆகுசெலவு பிரதிபலிப்புக் கட்டண முறையியலில் காணப்படும் நியதிகளின் அடிப்படையில் கணிப்பிடப்பட்டு அனுமதித்த ஆகக்கூடிய வருமானம் எனப் பொருள்படும் ;

"ஆணைக்குழு" என்பது, 2002 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட இலங்கைப் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு என்று பொருளாகும் ;

"திகதிகள்" என்பது, வேறுவகையில் சுட்டிக்காட்டப்பட்டாலன்றி இறுப்பனவு காலப்பகுதி தொடங்குவதற்கு முன்னரான ஆண்டிற்கு நேரொத்த (இறுப்பனவு ஆக்கக்கூறு மீளாய்வுகள் எனும் பட்சத்தில்) அல்லது சரிக்கட்டப்பட்ட இறுப்பனவு ஆக்கக்கூறு ஏற்புடைமையாகின்றதற்கு முன்னரான ஆண்டு (இறுப்பனவு ஆக்கக்கூறு ஆண்டின் சரிக்கட்டுதல் எனும் சந்தர்ப்பத்தில்) அல்லது சரிக்கட்டப்பட்ட இறுப்பனவு ஆக்கக்கூறு ஏற்புடையதாகின்றதற்கு முன்னரான ஆறு மாத காலப் பகுதிக்கு (மீளாய்வு ஆக்கக்கூறு சரிக்கட்டுதல்கள்) எனப் பொருள்படும்.

"உரிமம் பெறுநர்" என்பது, மீளாய்வு எனும் விடயத்திற்கேற்ப மின்சார கடத்துகை மற்றும் தொகை மின்சார விற்பனை இறுப்பனவுகள் அல்லது மின்சார வழங்கல் மற்றும் மின்சார விநியோக இறுப்பனவுகள் என்பவற்றுக்கான ஏற்பாடுகளை உள்ளடக்கியதும் மற்றும் அத்தகைய இறுப்பனவின் மீளாய்வுக்காக ஒரு நடவடிக்கைமுறையை குறித்துரைக்கின்ற ஏற்பாடுகளை உள்ளடக்காததுமான, மின்சார செலுத்துகைக்கான உரிமம் பெறுநர் அல்லது வழங்கல் உரிமம் பெறுநர் என்று பொருள்படும் ;

"அறிவிப்பு" என்பது, சட்டத்தின் மற்றும் இபொபஆ இன் கீழ் தரப்பட்டுள்ள தத்துவங்களுக்கிணங்க ஆக்கப்பட்ட ஏதேனும் முடிபை இறுப்பனவு உரிமம் பெறுநர்களுக்கு அறிவிப்பதற்கு ஆணைக்குழுவினூடாக எழுத்திலான ஒரு தொடர்பாடல் என்று பொருளாகும். அத்துடன் மூலக் கடிதங்கள் அல்லது டிஜிட்டல் முறையில் ஒப்பமிடப்பட்ட மின்னஞ்சல்கள் என்பன இந்நோக்கத்திற்காக வலிதான எழுத்துமூல தொடர்பாடல் எனக் கருதப்படுதல் வேண்டும் ;

"இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுச் சட்டம்" என்பது, 2002 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுச் சட்டம் என்று பொருளாகும் ;

"இறுப்பனவு முறையியல்" என்பது, ஆணைக்குழுவினால் ஆங்கீகரிக்கப்பட்ட பல ஆண்டுகளுக்கான ஆகுசெலவு பிரதிபலிப்பு இறுப்பனவு முறையியல் என்று பொருளாகும் ;

"கட்டண காலப்பகுதி" என்பது, இறுப்பனவுகளை மீளாய்வு செய்வதற்கான அந்த ஆகுசெலவு பிரதிபலிப்பு இறுப்பனவு முறையியலில் தாபிக்கப்பட்டுள்ள ஐந்து வருட காலப்பகுதிகளின் ஒவ்வொரு காலப்பகுதியும் என்று பொருளாகும். முதலாவது இறுப்பனவு காலப்பகுதியானது 2011 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து தொடங்குகின்றது. இதனைத் தொடர்ந்து வருகின்ற இறுப்பனவு காலப்பகுதிகள் 2016 ஆம் ஆண்டு சனவரி மாதம் 1 ஆந் திகதி, 2021 ஆம் ஆண்டு சனவரி மாதம் 1 ஆந் திகதி முதலிய திகதிகளில் தொடங்குதல் வேண்டும் ;

"மீளாய்வு" என்பது, ஒவ்வொரு கட்டண கால முடிவிலும் முதலாவது தடவையாகத் தாபிக்கப்பட்டிருக்கின்ற அல்லது மீளமைக்கப்பட்டிருக்கின்ற கட்டண முறையியலில் சுட்டிக்காட்டியவாறான கட்டண ஆக்கக்கூறுகளின் ஊடான நடபடிமுறை எனப் பொருள்படும். இந்த நோக்கத்தின் நிமித்தம், ஆகுசெலவு பிரதிபலிப்புக் கட்டண முறையியல் அந்த உரிமம் பெற்ற கட்சிக்காரர் அதில் தேவைப்படுத்தப்பட்டுள்ள விதத்திலும் மற்றும் அதில் தாபிக்கப்பட்டிருக்கும் குறித்த கட்டணத் தொகுப்பு சார்ந்த பொறிமுறைத் திட்டங்களுக்கு இணங்கவும் தகவல்களை வழங்குமாறு தேவைப்படுத்தும் ஆணைக்குழு குறித்த அந்த மீளாய்வுக்கான தனது அங்கீகாரத்தை வழங்க வேண்டும்.

''எழுத்திலான வேண்டுகோள்'' என்பது, ஆகுசெலவு பிரதிபலிப்புக் கட்டண முறையியலுக்கும் மற்றும் இ. பொ. ப. ஆ. சட்டம் மற்றும் சட்டத்தின்கீழ் வழங்கப்பட்டுள்ள தத்துவங்களுக்கு இணங்கவும், குறித்த ஒரு தேவைப்பாட்டிற்குப் பதிலளிக்குமாறு உரிமம் பெறுநர் ஆணைக்குழு வேண்டுகோள் விடுக்கின்றதன் ஊடாக எழுத்திலான தொடர்பாடல் என்று பொருளாகும். ஆரம்பக் கடிதங்கள் (கையொப்பமிடப்பட்ட) அல்லது டிஜிட்டல் ரீதியில் ஒப்பமிடப்பட்ட மின்னஞ்சல்கள் என்பன குறித்த இந்த நோக்கத்தின் நிமித்தம் எழுத்திலான வலிதான தொடர்பாடல் எனக் கருதப்படுதல் வேண்டும்.

''எழுத்தில் பதிலளித்தல்'' என்பது, எழுத்திலான ஒரு வேண்டுகோளுக்குப் பதிலளித்துள்ள எழுத்திலான ஒரு தொடர்பாடல் என்று பொருள்படும். மூலக் கடிதங்கள் அல்லது டிஜிட்டல் ரீதியில் ஒப்பமிடப்பட்ட மின்னஞ்சல்கள் என்பன இந்நோக்கத்திற்காக வலிதான எழுத்திலான தொடர்பாடல் எனக் கருதப்படுதல் வேண்டும்.

**பின்னிணைப்பு**

*பகுதி - I*

**இறுப்பனவு மீளாய்வு மற்றும் சரிக்கட்டப்பட்ட விபரிக்கப்பட்ட நடவடிக்கைமுறைகள்**
**இறுப்பனவு மீளாய்வு மற்றும் சரிக்கட்டப்பட்ட இறுப்பனவு பற்றிய அட்டவணை**

1. மின்சார இறுப்பனவு ஆக்கக்கூறுகளும் மற்றும் உப ஆக்கக்கூறுகளும் இறுப்பனவு முறையியலுக்கு இணங்கவும் பின்வருமாறு மீளாய்வு செய்யப்படுதலும் சரிக்கட்டப்படுதலும் வேண்டும்.

**அ. மீளாய்வுகள்**

2. பின்வரும் இறுப்பனவு ஆக்கக்கூறுகள் ஒவ்வொரு இறுப்பனவு காலப்பகுதி ஒரு தடவை ஆணைக்குழுவினால் மீளாய்வு செய்யப்பட்டு அங்கீகரிக்கப்படுதல் வேண்டும். அதாவது இயைபான இறுப்பனவு காலப்பகுதிக்காக:-

(அ) மின்சார கடத்துகை அனுமதிக்கப்பட்ட இறைவரி;

(ஆ) தொகை விநியோக மற்றும் தொழில் தொழிற்பாடுகள் அனுமதிக்கப்பட்ட இறைவரிகள் மற்றும் வர்த்தக அனுமதிக்கப்பட்ட வருமானங்கள்;

(இ) தொகை விநியோக இறுப்பனவு எதிர்வுகூறல்;

(ஈ) மின்சார வழங்கல் அனுமதிக்கப்பட்ட இறைவரி; அத்துடன்

(உ) இழப்புக்காரணி சீராக்கல்கள் அடங்கிய சில்லறை மின்சார சேவைக் கட்டணங்கள்.

**ஆ. சரிக்கட்டுதல்கள்**

3. பின்வரும் இறுப்பனவு ஆக்கக்கூறுகள் இறுப்பனவு முறையியலில் உள்ளடக்கப்பட்டுள்ள வருமானக் கட்டுப்பாட்டு சூத்திரங்களுக்கு இணங்க இறுப்பனவு காலப்பகுதியின் போது ஆணைக்குழுவினால் சரிக்கட்டப்பட்டு அங்கீகரிக்கப்படுதல் வேண்டும்.

(அ) மின்சார கடத்துகை அனுமதிக்கப்பட்ட ஆண்டிறுதி இறைவரி சரிக்கட்டல் ;
(ஆ) தொகை விநியோக மற்றும் தொழில் தொழில்பாடுகள் ஆண்டிறுதி சரிக்கட்டுதலுக்கான அனுமதிக்கப்பட்ட இறைவரிகள் ;
(இ) தொகை விநியோக இறுப்பனவு எதிர்வுகூறல் அரையாண்டு ரீதியான சரிக்கட்டுதல்; அத்துடன்
(ஈ) அனுமதிக்கப்பட்ட இறைவரி ஆண்டிறுதி சரிக்கட்டுதல் வழங்கல் ; அத்துடன்
(உ) இழப்புக்காரணி சரிக்கட்டுதல் அடங்கிய மின்சார சேவை சில்லறை இறுப்பனவு ஆண்டிறுதி சரிக்கட்டுதல்.

**இ. அதிவிஷேட மீளாய்வுகள்**

4. மின்சார கடத்துகை உரிமம் பெறுநர்:-

(அ) ஏதேனும் ஒரு ஆண்டின் போது சுட்டிக்காட்டல் சூத்திரத்தில் திரண்ட வித்தியாசம் 15% வீதத்தை விஞ்சும், அல்லது

(ஆ) எதிர்பாராத மற்றும் குறித்த தொகை மின்சார விநியோக இறுப்பனவு எதிர்வுகூறலில் வித்தியாசம் ஒன்று நிகழும், அல்லது

(இ) ஏதேனும் ஆண்டின் போது எதிர்பாராராத குறித்த நிகழ்வு காரணமாக உறப்பட்ட ஆகுசெலவுகள் ஆண்டின் அனுமதிக்கப்பட்ட இறைவரியின் 25% வீதத்தைவிஞ்சும் போது அதனை அதிவிஷேடமாக அனுமதிக்கப்பட்ட வருமான மீளாய்வுகளின் நிமித்தம் ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கலாம்.

5. மின்சாரப் பகிர்ந்தளிப்பு உரிமம் பெற்ற ஒரு தரப்பு:

(அ) ஏதேனும் ஒரு ஆண்டின் போது சுட்டிக்காட்டல் சூத்திரத்திலுள்ள திரண்ட வித்தியாசம் 15% வீதத்தை விஞ்சும், அல்லது

(ஆ) ஏதேனும் ஒரு ஆண்டு காலப்பகுதியில் எதிர்பாராத குறித்த நிகழ்வு ஒன்றினால் ஏற்பட்ட ஆகுசெலவுகள் அந்த ஆண்டின் அனுமதிக்கப்பட்ட இறைவரியின் 25% வீதத்தை விஞ்சும் போது அதனை அதிவிஷேடமாக அனுமதிக்கப்பட்ட வருமான மீளாய்வுகளின் நிமித்தம் ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கலாம்.

## பகுதி II

### மானியங்கள்

**அ. தேர்ந்தெடுக்கப்பட்ட பாவனையாளர் வகுதிகளுக்கான வெளிவாரி மானியங்கள்**

6. ஏதேனும் ஒரு கட்டண காலம் தொடங்குவதற்கு முன்னர், ஆணைக்குழு அரசாங்கத்தின் கொள்கைகளைச் செயற்படுத்தும் மற்றும் அங்கீகாரத்தின் நிமித்தம் திறைசேரிக்கான சகல அடிப்படை அம்சங்களுக்கும் வசதிகளை செய்யும் பொருட்டு குறித்த அவ்விறுப்பனவு காலத்திற்கு அவசியமான மானியங்களின் மதிப்பிடப்பட்ட அளவுகளைக் குறித்துக்காட்டுகின்ற ஒரு மானியத்தொகை எதிர்வுகூறல் அறிக்கையை திறைசேரிக்கு சமர்ப்பிக்க வேண்டும். இந்த ஆய்வானது அந்தக் கட்டண காலத்தின் முதலாவது கட்டண காலத்தைத் தொடர்ந்து வருகின்ற ஆண்டுகளுக்கான தேவைப்பாடுகள் தொடர்பான ஒரு எதிர்வுகூறல் திட்டத்தையும் உள்ளடக்கியதாக இருத்தல் வேண்டும். குறித்த அந்தக் கட்டண கால ஆண்டின் போது ஆணைக்குழு தொடர்ந்து வரும் ஆண்டிற்கு அவசியமான மானிய தொகைகளின் அளவை இற்றைப்படுத்தி, அடுத்து வருகின்ற ஆண்டிற்கான மானிய தொகைகளுக்கு திறைசேரியின் அங்கீகாரத்தைக் கோருதல் வேண்டும்.

7. உரிமம் பெறுநர் ஏப்றல் மாதத்தின் இறுதி வேலை நாளன்று அல்லது அதற்கு முன்னர் பின்வருவனவற்றை (ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட மாதிரிப்படிவங்களை பயன்படுத்தி) ஆணைக்குழுவுக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

(அ) தொகை விநியோகக் கொடுக்கல்வாங்கல் கணக்கு (BSTA) பற்றிய கூற்று ;

(ஆ) மின்சார வழங்கல் உரிமம் பெறுநர் மற்றும் மின்சாரக்கேள்வி எதிர்வுகூறல்கள் ;

(இ) மின்சார வழங்கல் உரிமம் பெறுநர் மின்சாரப் பகிர்ந்தளிப்புத் திட்டங்கள் மற்றும் CAPEX நிகழ்ச்சித்திட்டங்கள் ;

(ஈ) மின்சார கடத்துகை உரிமம் பெறுநர் மின்சார கடத்துகை திட்டம் மற்றும் CAPEX திட்டம் ;

(உ) மின்சார பிறப்பாக்க உரிமம் பெறுநர் மின்சார உற்பத்தி மீள்வலுப்படுத்தும் திட்டம் ;

(ஊ) பின்வரும் மூன்று மாத காலங்களுக்கான (அந்தக் கட்டண காலத்தின் முதலாவது ஆண்டு முடியும் வரை) மின்சார கடத்துகை உரிமம் பெறுநர் மின்சார விநியோகக் கட்டணங்கள் எதிர்வு கூறல்கள் மற்றும் அந்தக் கட்டண காலம் முடியும் வரையான எஞ்சிய ஆறு மாத காலத்திற்கான தொகை மின்சார விநியோக கட்டண எதிர்வுகூறல்கள் ;

(எ) அனைத்து உரிமம் பெறுநர்களும் முன்னைய ஆண்டிற்கான கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகள் கணக்காய்வு உரிமம் பெறுநர்களின் வசம் இல்லாத பட்சத்தில், ஆகக்குறைந்தது கணக்காய்வு செய்யப்படாத கணக்குகள் ;

(ஆ) ஆணைக்குழு மேலேயுள்ள ஒவ்வொரு ஆவணங்களையும் ஆக்குவதற்கான விரிவான ஒரு அட்டவணையையும் வழங்கலாம்.

*8. ஆணைக்குழு ஒவ்வொரு ஆண்டினதும் மே மாதத்தின் இறுதி வேலை நாளன்று அல்லது அதற்கு முன்னர், குறித்த இறுப்பனவு முறையியலைப் பயன்படுத்தி, நகல் இறுப்பனவு மதிப்பீட்டைத் தயாரித்து, மதிப்பிடப்பட்ட நகல் கட்டணங்களை தனது இணையத்தளத்தில் பிரசுரித்தல் வேண்டும்.*

*9. ஆணைக்குழு ஒவ்வொரு ஆண்டினதும் யூன் மாதம் 15 ஆம் நாளன்று அல்லது அதற்கு முன்னர், அடுத்து வருகின்ற ஆண்டிற்கான மானியத்தொகைகள் பற்றிய எதிர்வுகூறல் தொடர்பான அறிக்கையை திறைசேரிக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.*

*10. மானிய அளவு பற்றிய அறிக்கை திறைசேரிக்கு சமர்ப்பிக்கப்பட்டதன் உடனடுத்துப்பின்னர், ஆணைக்குழு திறைசேரிக்கு அதன் அங்கீகாரத்திற்காகவும் மற்றும் தேசிய வரவுசெலவுத்திட்ட தயாரிப்பில் உள்ளடக்குமாறும் கோருகின்ற ஒரு வேண்டுகோளை திறைசேரிக்கு ஆக்குதல் வேண்டும்.*

*11. ஒவ்வொரு ஆண்டினதும் யூலை மாதத்தின் இறுதி வேலை நாளன்று அல்லது அதற்கு முன்னர், ஆணைக்குழு தேசிய வரவுசெலவுத்திட்டத்தில் அத்தகைய விடயத்திற்கு ஒதுக்கீடுகளை ஏற்பாடு செய்யும் பொருட்டு, அத்தகைய மானியத் தொகைகளுக்கான அங்கீகாரத்தினை அளிப்பதனை இயலச்செய்யும் வகையில் திறைசேரியினால் கோரப்படும் எவையேனும் மேலதிகத் தகவல்களை அல்லது விளக்கங்களை வழங்குதல் வேண்டும்.*

## *பகுதி III*

### இறுப்பனவு காலப்பகுதிக்கான மீளாய்வு இறுப்பனவு நடவடிக்கைமுறை

**உ. நோக்கம் தொடர்பான அம்சங்கள்.**

*12. ஒவ்வொரு இறுப்பனவு காலப்பகுதியின் இறுதி ஆண்டின் சனவரி மாதத்தின் இறுதி வேலை நாளன்று அல்லது அதற்கு முன்னர், ஆணைக்குழு சனவரி மாதம் 1 ஆம் திகதியில் ஆரம்பமாகின்ற பின்வரும் இறுப்பனவு காலப்பகுதிக்கு நேரொத்த அனைத்து மீளாய்வுகளுக்கும் சரிக்கட்டல்களுக்குமான பஞ்சாங்கத்தினை அனைத்து உரிமம் பெறுநர்களுக்கும் அது பற்றி அறிவித்தலும் தகவல் வழங்குதலும் வேண்டும். பஞ்சாங்க ஆண்டானது ஆணைக்குழுவின் இணையத்தளத்தின் மீது வெளியிடப்படுதல் வேண்டும்.*

*13. பஞ்சாங்கத்துடன் சேர்த்து ஆணைக்குழுவானது பின்வருவனவற்றை உரிமம் பெறுநருக்கு அறிவித்தல் வேண்டும்:-*

*(அ) அந்த இறுப்பனவு முறையியலில் நிலைநாட்டப்பட்டுள்ள மற்றும் இறுப்பனவு காலப்பகுதி தொடங்குவதற்கு முன்னர் ஆணைக்குழுவினால் வரையறுக்கப்பட தேவைப்படுத்தப்படும் பல்வேறுபட்ட தகவுதிறன்கள்;*

*(ஆ) தகவல்களை சமர்ப்பித்தல், கோப்பிடுதல் முதலியனவற்றுக்காக பயன்படுத்த வேண்டிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட மாதிரிப்படிவங்கள் எவையேனும் இருப்பின், அவற்றின் நாளது வரையாக்கல்;*

*(இ) ஒவ்வொரு உரிமம் பெறுநரினாலும் சமர்ப்பிக்கப்படவேண்டிய ஏதேனும் உரிமம் தகவல் பற்றி;*

*14. ஆணைக்குழுவினால் உரிமம் பெறுநர் ஒவ்வொருவரும் அங்கீகரிக்கப்பட்ட மாதிரிப்படிவங்களைப் பயன்படுத்தி தேவைப்படுத்தப்படும் தகவல்களை சமர்ப்பித்தல் வேண்டும். ஆணைக்குழுவினால் அவ்வாறு வெளிப்படுத்திய சந்தர்ப்பங்களுக்காக, அம் மாதிரிப்படிவங்கள் ஆணைக்குழுவினால் நோக்கத்திற்காக ஆணைக்குழு தயாரித்த LISS ஐ அல்லது ஏதேனும் வேறு தகவல் தொழில்நுட்ப (த.தோ) நடபடிமுறையைப் பயன்படுத்தி அத்தகைய தகவல்கள் இலத்திரனியல் ஊடாக சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.*

*15. ஆணைக்குழு, உரிமம் பெறுநருக்கு தேவைப்பாடுகளைப் பூர்த்திசெய்யும் பொருட்டு, அவசியமான பயிற்சியையும் ஆதரவினையும் வழங்குதல் வேண்டும்.*

*16. உரிமம் பெறுநர் ஒருவர் அந்தக் கட்டண முறையியலிலுள்ள தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுக அல்லது ஆணைக்குழு கோரிய அத்தகைய தகவல்களை ஆணைக்குழுவுக்கு வழங்குவதற்குத் தவறினால், ஆணைக்குழுவானது,*

*(அ) நீடிக்கப்பட்ட ஒரு காலப்பகுதியினுள், அத்தகைய கால நீடிப்பு சாத்தியம் எனும் பட்சத்தில், அந்தத் தகவல்கள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும் எனத் தேவைப்படுத்தவும் ;*

*(ஆ) வழங்கப்பட்ட காலம் முடிவுற்ற பின்னர் மற்றும் உரிமம் பெறுநர் ஆணைக்குழுவின் வேண்டுகோளுக்கு முறையாக பதிலளிக்கவில்லை எனும் பட்சத்தில், ஆணைக்குழு, உரிமம் பெறுநரினால் சமர்ப்பிக்கப்படாத தகவல்களைப் பெற்றுக் கொள்ளும் பொருட்டு தனது சொந்த ஆராய்ச்சியினை நடாத்துதல் வேண்டும். ஆணைக்குழு ;*

(இ) உரிமம் பெறுநருக்கு எதிராக ஒரு நீதிவான் முன்னிலையில் வழக்குத் தொடுக்கலாம்; அத்துடன்

(ஈ) உரிமம் பெறுநரினால் சமர்ப்பிக்கப்படாத தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்காக நடத்திய விசாரணை தொடர்பில் உறப்பட்ட செலவுகளை அறவிடவும் இயலும்.

**ஊ. மின்சார கடத்துகை அனுமதிக்கப்பட்ட இறைவரி மற்றும் தொகை மின்சார விநியோக தொழில் இலக்கங்கள் வர்த்தக அனுமதிக்கப்பட்ட இறைவரிகள் பற்றிய மீளாய்வு**.

17. விரிவான இறுப்பனவு மீளாய்வு சீராக்கல் பற்றிய நடைமுறைகளுக்கு இணங்கவும் பொருத்தமான வருமான மீளாய்வு நடைமுறைக்கு அமையவும், பின்வரும் கட்டண காலப் பகுதிக்கான மின்சார கடத்துகை வருமானத்தையும் மற்றும் தொகை மின்சார விநியோக இயக்கச் செயற்பாடுகள் வர்த்தக அனுமதிக்கப்பட்ட வருமானங்களையும் ஆணைக்குழுவுக்கு அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்க வேண்டும். அத்தகையவைகள் குறித்த வருடத்தினது ஆகஸ்ட் மாதத்தின் முதல் வேலை நாளில் அல்லது அதற்கு முற்பட்ட நாளில் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

18. (1) சமர்ப்பிக்கும் நாளுக்கும் ஒற்றோபர் மாதத்தின் முதலாவது வேலை நாளுக்கும் இடையில் ஆணைக்குழு:

(அ) அத்தகையவைகள் அங்கீகாரத்திற்காகக் கிடைக்கப்பெற்று 24 மணித்தியால காலத்திற்குள், ஆணைக்குழு தனது இணையத்தளத்தில் பிரசுரிக்கவும் ;

(ஆ) ஏதேனும் விளக்கம், திருத்தம், சேர்த்தல் முதலியன இருப்பின், உரிமம் பெறுநருக்கு எழுத்திலான ஒரு வேண்டுகோளை செய்வதன் மூலம் ஆணைக்குழுவினுடைய இணையத்தளத்தில் பிரசுரிக்கவும் வேண்டும். அதேநேரம் ஆணைக்குழு:

(2) கடத்துகை உரிமம் பெறுநர் அத்தகைய ஒரு வேண்டுகோள் கிடைக்கப்பெற்ற திகதியிலிருந்து ஐந்து வேலை நாட்களுக்குள், ஆணைக்குழுவிற்கு எழுத்தில் பதிலளித்தல் வேண்டும்.

19. ஆணைக்குழு, மின்சார கடத்துகை அனுமதிக்கப்பட்ட வருமானம் மற்றும் தொகை மின்சார விநியோக இயக்கச்செயற்பாடுகள் வர்த்தக அனுமதிக்கப்பட்ட வருமானங்கள் ஆகியன தொடர்பான நகல் தீர்மானத்தை வருடத்தின் ஒற்றோபர் மாதம் முதலாவது வேலை நாளுக்கு முன்னர் அங்கீகரிக்க வேண்டும். அவ்வாறு அங்கீகரித்த பின்னர், 24 மணித்தியாலங்களுக்குள், ஆணைக்குழு:

(அ) குறித்த அந்த நகல் தீர்மானத்தை தனது இணையத்தளத்தில் பிரசுரிக்கவும்; அத்துடன்

(ஆ) அந்த நகல் தீர்மானம் தொடர்பில் தனக்குக் கிடைக்கின்ற கருத்துரைகள், அவதானிப்புரைகள் முதலியவற்றை, அந்த உரிமம் பெறுநர்களுக்கும் மற்றும் பொதுமக்களும் இருபது வேலை நாட்கள் அடங்கிய ஒரு காலப்பகுதியினுள் அறியப்படுத்தவும் வேண்டும்.

20. ஆணைக்குழு, மின்சார கடத்துகை அனுமதிக்கப்பட்ட வருமானம் மற்றும் தொகை மின்சார விநியோக இயக்கச்செயற்பாடுகள் வர்த்தக அனுமதிக்கப்பட்ட வருமானங்கள் ஆகியன தொடர்பான அந்த தீர்மானத்தை வருடத்தின் நவம்பர் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் அங்கீகரிக்க வேண்டும். அந்த அங்கீகாரத்தின் பின்னர் ஐந்து வேலை நாட்களுக்குள்:

(அ) மின்சார கடத்துகை உரிமம் பெறுநருக்கு அது பற்றி அறியப்படுத்தவும் ; மற்றும்

(ஆ) அந்தத் தீர்மான விபரங்களை தனது இணையத்தளத்தில் பிரசுரிக்கவும் வேண்டும்.

**எ. குறித்த கட்டண காலத்திற்கான தொகை மின்சார விநியோகக் கட்டண எதிர்வுகூறல்**

21. மின்சார கடத்துகை உரிமம் பெறுநர் விரிவான இறுப்பனவு மீளாய்வு சீராக்கல் நடைமுறைகளுக்கு இணங்க, ஆணைக்குழுவுக்கு அதன் அங்கீகாரத்தின் நிமித்தம் முழுக் கட்டண காலத்தினதும் ஒவ்வொரு வருடத்தினதும் ஏப்ரல் மாதம் 01 ஆம் திகதியிலிருந்து தொடங்கி ஒற்றோபர் 01 ஆம் திகதி வரையுள்ள ஆறு மாதத்திற்கான தொகை மின்சார விநியோகக் கட்டண எதிர்வுகூறல்களை ஒவ்வொரு வருடத்தினதும் நவம்பர் மாதத்தின் முதலாவது வேலை நாளில் அல்லது அதற்கு முன்னர் சமர்ப்பித்தல் வேண்டும்.

22. இறுப்பனவு காலப்பகுதியின் முதல் ஆறு மாத காலத்திற்கான தொகை மின்சார விநியோக இறுப்பனவு எதிர்வுகூறல்கள் குறித்த அந்தக் கட்டண காலத்தின் எஞ்சியிருக்கின்ற ஆறு மாத காலப்பகுதிக்குள் எதிர்பார்க்கப்பட்ட எதிர்வுகூறல்களாக பிரகாரம் விபரங்களுடன் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

*23.* சமர்ப்பணமானது இறுப்பனவு முறையியல் காலவிதிப்பனவுகளுக்கு இணங்க, முதல் ஆறு மாத காலப்பகுதியின் போது ஏற்புடைமை தொகை மின்சார விநியோகக் கொடுக்கல்வாங்கல்கள் கணக்கில் பிரதிபலித்துக் காட்டப்பட்டுள்ளவாறான எதிர்வுகூறல் மற்றும் உண்மையான தொகை மின்சார விநியோக இறுப்பனவுகளுக்கும் இடையில் நிலவுகின்ற வித்தியாசங்களுக்கான நட்டஈட்டுத் தொகை உள்ளடங்கியிருத்தல் வேண்டும்.

*24.(1)* சமர்ப்பணத்தின் திகதி மற்றும் சனவரி மாதத்தினது முதலாவது வேலை நாளுக்கும் இடைப்பட்ட காலத்தில், ஆணைக்குழு:

(அ) அங்கீகாரத்திற்கான தொகை மின்சார விநியோக இறுப்பனவு எதிர்வுகூறல் கிடைக்கப் பெற்று 24 மணித்தியாலங்களுக்குள் அதனை ஆணைக்குழுவினுடைய இணையத்தளத்தில் பிரசுரித்தல் வேண்டும் ;

(ஆ) ஆணைக்குழு தேவைப்படுத்தலாம் எனும் ஏதேனும் விளக்கம், திருத்தம், சேர்த்தல் முதலியன ஆணைக்குழுவின் மீது எழுத்தில் ஒரு வேண்டுகோளை விடுக்கவும், மற்றும் அவை தொடர்பான விபரங்களை தனது இணையத்தளத்தில் பிரசுரிக்கவும், அத்துடன்

(2) மின்சார கடத்துகை உரிமம் பெறுநர் அத்தகைய வேண்டுகோள் கிடைக்கப்பெற்ற திகதியிலிருந்து ஐந்து வேலைநாட்களுக்குள் ஆணைக்குழுவுக்கு எழுத்தில் பதிலளித்தல் வேண்டும்.

*25.* ஆணைக்குழு, இறுப்பனவு காலப்பகுதியின் முதல் ஆறு மாத காலத்திற்கான தொகை மின்சார விநியோக இறுப்பனவு எதிர்வுகூறல் மீதான ஒரு நகல் முடிபை அதே ஆண்டின் சனவரியின் ஐந்து வேலை நாட்களுக்கு முன்னர் அத்துடன் அந்த அங்கீகாரத்தினது 24 மணித்தியாலங்களுக்குள் தயாரித்தல் வேண்டும்.

(அ) ஆணைக்குழுவினுடைய நகல் முடிபொன்றை அனுப்புதல் ;

(ஆ) அத்தகைய தீர்மானம் பற்றிய தத்தமது கருத்துரைகள், அவதானிப்பு விடயங்கள் என்பன ஆணைக்குழுவுக்கு 10 வேலை நாட்கள் அடங்கிய ஒரு காலப்பகுதியினுள் கிடைக்கும் என்பதை உரிமம் பெறுநர்களுக்கும் மற்றும் பொதுமக்களுக்கும் அறியப்படுத்தவும் வேண்டும்.

*26.* ஆணைக்குழு, இயைபான காலத்தின் பெப்ருவரி 15 ஆம் திகதிக்கு முன்னர் இறுப்பனவு காலப்பகுதியாயின் முதல் ஆறு மாத காலப்பகுதிக்கு தொகை மின்சார விநியோக இறுப்பனவு எதிர்வுகூறல் மீதான முடிபை அங்கீகரித்தல் வேண்டும், மற்றும்ஆணைக்குழு:

(அ) குறித்த கட்டண காலத்தின் முதல் ஆறு மாத காலத்திற்கான தொகை மின்சார விநியோகக் இறுப்பனவு எதிர்வுகூறல் அங்கீகாரம் பற்றியும் மற்றும் குறித்த இறுப்பனவு காலத்தின் முதல் ஆறு மாத காலத்திற்கான தொகை மின்சார விநியோகக் கொடுக்கல்வாங்கல்கள் கணக்குகளிலுள்ள திரண்ட வித்தியாசங்களின் நட்டஈட்டுத் தொகை விபரங்கள் பற்றியும் உரிமம் பெறுநர்களுக்கும் அறியப்படுத்தவும், அத்துடன்

(ஆ) இறுப்பனவு காலத்தின் முதல் ஆறு மாத காலப்பகுதியின் தொகை மின்சார விநியோகக் இறுப்பனவு எதிர்வுகூறல் மீதான அங்கீகரிக்கப்பட்ட முடிபையும் மற்றும் இறுப்பனவு காலப்பகுதியினை மாத காலத்திற்கான தொகை மின்சார விநியோகக் கொடுக்கல்வாங்கல்கள் கணக்குகளிலுள்ள திரண்ட வித்தியாசங்களின் நட்டஈட்டுத் தொகை பற்றிய விபரங்களையும் தனது இணையத்தளத்தில் பிரசுரிக்கவும் வேண்டும்.

***(ஏ) எதிர்வுகூறப்பட்டு சரிக்கப்பட்ட தொகை மின்சார விநியோக இறுப்பனவு (ABST)***

*27.* எதிர்வுகூறப்பட்ட சரிக்கப்பட்ட தொகை மின்சார விநியோக இறுப்பனவு (ABST) குறித்த கட்டண முறையியலுக்கு இணங்க ஒரு சீரான தேசிய இறுப்பனவு முறையை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவைப்படுத்தப்படும்.

*28.*

(அ) ஆணைக்குழு, ஏப்பிரல் மாதம் 1 ஆம் திகதியைத் தொடர்ந்து ஆரம்பமாகும் ஆறு மாத காலப்பகுதியில் தொகை மின்சார வழங்கல் உரிமம் பெறுநர் ஒவ்வொரு விடயத்திற்கும் செலவுப்பட்டியலிடும் ஒவ்வொரு மின்சாரப் பகிர்ந்தளிப்பு கட்சிக்காரருக்குமான எதிர்வுகூறப்பட்டு சரிக்கப்பட்ட தொகை மின்சார விநியோகக் கட்டணங்கள் தொடர்பான அந்தத் தீர்மானத்தை குறித்த வருடத்தின் மார்ச் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் அங்கீகரித்தல் வேண்டும் ;

(ஆ) ஆணைக்குழு:

(i) அங்கீகாரத்தின் பின்னர் ஐந்து வேலை நாட்களுக்குள், அங்கீகாரம் பற்றி மின்சார கடத்துகை உரிமம் பெறுநர் மற்றும் மின்சார வழங்கல் உரிமம் பெறுநருக்கும் அறிவித்தல் வேண்டும், அத்துடன்

(ii) ஆணைக்குழுவினுடைய இணையத்தளத்தின்மீது அங்கீகரிக்கப்பட்ட முடிபை அனுப்புதல் வேண்டும்.

**ஐ. மின்சார வழங்கல் அனுமதிக்கப்பட்ட இறைவரி மற்றும் மின்சார சேவை சில்லறை இறுப்பனவு மீளாய்வு**

*29. மின்சார வழங்கல் உரிமம் பெறுநர் விரிவான இறுப்பனவு காலம் தொடங்குவதற்கு முன்னர், அந்த ஆண்டின் ஓகத்து மாதத்தினது முதலாவது வேலை நாளுக்கு முன்னர், வழங்கல் அனுமதிக்கப்பட்ட வருமானத்தையும் மின்சார சேவை சில்லறை இறுப்பனவு மீளாய்வையும் ஆணைக்குழுவுக்கு அதன் அங்கீகாரத்திற்காக சமர்ப்பித்தல் வேண்டும்.*

*30. (1) வருடத்தின் ஒற்றோபர் மாதத்தினது முதல் நாளுக்கும் மற்றும் அந்த சமர்ப்பண நாளுக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் ஆணைக்குழு:*

(அ) அங்கீகாரத்துக்கான அத்தகைய சமர்ப்பண விபரங்கள் கிடைக்கப்பெற்று 24 மணித்தியாலங்களுக்குள், தனது இணையத்தளத்தில் பிரசுரிக்கவும், மற்றும்

(ஆ) ஆணைக்குழு தேவைப்படுத்தலாம் எனும் ஏதேனும் விளக்கம், திருத்தம், சேர்த்தல் என்பன இருப்பின், அவை தொடர்பில் உரிமம்பெறுநர் எழுத்திலான ஒரு வேண்டுகோளை விடுவிக்கவும், அவற்றை தனது இணையத்தளத்தில் பிரசுரிக்கவும், அத்துடன்

*(2) அத்தகைய வேண்டுகோள் கிடைக்கப்பெற்ற நாளிலிருந்து ஐந்து வேலை நாட்களுக்குள் பதிலளிக்குமாறு கோரி மின்சார வழங்கல் உரிமம் பெறுநருக்கு எழுத்திலான ஒரு வேண்டுகோளை விடுவிக்கவும் வேண்டும்.*

*31. ஆணைக்குழு, மின்சார வழங்கல் உரிமம் பெறுநரினதும் மின்சார வழங்கல் அனுமதிக்கப்பட்ட வருமானம் மற்றும் மின்சார சேவை சில்லறைக் கட்டணங்கள் முதலியன தொடர்பான நகல் தீர்மானத்தை வருடத்தின் ஒற்றோபர் மாதம் முதலாவது வேலை நாளுக்கு முன்னர் அங்கீகரித்தல் வேண்டும்என்பதுடன், அந்த அங்கீகாரத்தின் 24 மணித்தியாலங்களுக்குள், ஆணைக்குழு:*

(அ) மின்சார வழங்கல் உரிமம் பெறுநரினதும் குறித்த அந்த நகல் தீர்மானத்தை தனது இணையத்தளத்தில் பிரசுரிக்கவும், அத்துடன்

(ஆ) மின்சார உரிமம் பெறுநர் ஒவ்வொருவரினதும் அந்த நகல் முடிபு தொடர்பில் ஆணைக்குழுவுக்குக் கிடைக்கும் கருத்துரைகள், அவதானிப்புரைகள் என்பன பற்றி, இருபது வேலை நாட்கள் கொண்ட ஒரு காலப்பகுதியினுள், பொதுமக்களுக்கும் மற்றும் உரிமம் பெறுநர்களுக்கும் அறியப்படுத்தவும் வேண்டும்.

*32. ஆணைக்குழு, மின்சாரம் வழங்கல் உரிமம் பெறுநர் ஒவ்வொருவரினதும் மின்சார வழங்கல் அனுமதிக்கப்பட்டவருமானம் மற்றும் மின்சார சேவை சில்லறை இறுப்பனவுகள் என்பனவற்றின்மீது நவம்பர் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் அங்கீகரிக்க வேண்டும் என்பதுடன், தனது அங்கீகாரம் பற்றி ஐந்து வேலை நாட்களுக்குள்:*

(அ) மின்சாரப் பகிர்ந்தளிப்பு உரிமம் பெறுநருக்கு அறிவித்தலும் ; அத்துடன்

(ஆ) அந்தத் தீர்மான விபரங்களை தனது இணையத்தளத்தில் பிரசுரித்தலும் வேண்டும்.

**எ. இறுப்பனவு காலப்பகுதிக்கான முடிவுப் பயன் பாவனையாளர்களுக்கான இறுப்பனவு அட்டவணை:**

*33. முடிவுப்பயன் பாவனையாளர்களுக்கான இறுப்பனவு அட்டவணை:*

(அ) உரிமம் பெறுநரினால் தயாரிக்கப்பட்டு, வருடத்தின் நவம்பர் மாதத்தினது முதலாவது வேலை நாளுக்கு முன்னர் அல்லது

(ஆ) ஆணைக்குழுவுக்கு வருடத்தின் சனவரி மாதத்தினது முதலாவது வேலை நாளுக்கு முன்னர் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

34. ஆணைக்குழு,இறுப்பனவு முறையியலினால் விவரிக்கப்பட்ட சீராக்கல்களுக்கு அமைவாக, ஏப்பிரல் மாதத்தின் 1 ஆம் திகதியைத் தொடர்ந்து வருகின்ற நாளில் தொடங்கும் இறுப்பனவு காலப்பகுதியில் பிரயோகிக்கப்பட வேண்டும் எனும் முடிவுப் பயன் வாடிக்கையாளர்களுக்கான இறுப்பனவு அட்டவணை தொடர்பான ஆலோசனைப் பத்திரத்தை குறித்த வருடத்தின் சனவரி மாதத்தினது முதலாவது வேலை நாளில் அல்லது அதற்கு முன்னர் பிரசுரித்தல் வேண்டும்.

35. முடிவுப் பயன் பாவனையாளர்களுக்காக மின்சாரம் வழங்கல் மற்றும் மின்சார விநியோகக் இறுப்பனவுகளின் மீது வெளியிடப்பட்ட ஆலோசனை ஆவணத்துடன் இணைந்து ஆணைக்குழு:

(அ) பொதுமக்கள் ஆலோசனைக்கான மற்றும் அடுத்த கட்டண காலத்திற்கான முடிவுப் பயன் பாவனையாளர்கள் தொடர்பான மின்சார விநியோகக் கட்டணங்களுக்கான திகதியைப் பிரகடனப்படுத்தவும் ;

(ஆ) பொதுமக்கள் ஆலோசனைப் பிரகடனப்படுத்தலையும் மற்றும் முடிவுப் பயன் பாவனையாளர்களுக்கான மின்சாரப் வழங்கல் மற்றும் மின்சார விநியோகக் கட்டணங்கள் ஆகியன தொடர்பான ஆலோசனைப் பத்திர வெளியீட்டையும் பற்றி உரிமம் பெறுநர்களுக்கும் அறியப்படுத்தவும் ;

(இ) முடிவுப் பயன் பாவனையாளர்களுக்கான மின்சாரம் வழங்கல் மற்றும் மின்சார விநியோகக் கட்டணங்கள் தொடர்பான ஆலோசனைப் பத்திரத்தை தனது இணையத்தளத்தில் பிரசுரிக்கவும், அத்துடன்

(ஈ) முடிவுப் பயன் பாவனையாளர்களுக்கான மின்சாரம் வழங்கல் மற்றும் மின்சார விநியோகக் கட்டணங்கள் தொடர்பான ஆலோசனைப் பத்திரம், பொதுமக்கள் ஆலோசனை பற்றிய நடைமுறைகள் மற்றும் பொதுமக்கள் ஆலோசனைப் பிரகடனப்படுத்தல் முதலியன பற்றி பொதுமக்களுக்கு அறியப்படுத்தவும் வேண்டும்.

**ஓ. முடிவுப் பயன் பாவனையாளர்கள் இறுப்பனவுகளின் மீளாய்வுக்கான பொதுமக்கள் ஆலோசனைகள் கேட்டறிதல்**

36. பொதுமக்கள் ஆலோசனை ஆணைக்குழுவினால் ஏற்றங்கீகரிக்கப்பட்ட நடவடிக்கை முறைக்கிணங்க நடத்தப்படுதல் வேண்டும்.

37. பொதுமக்கள் ஆலோசனைகள் சனவரி 20 ஆம் திகதிக்கு முன்னர் நடத்தப்படுதல் வேண்டும்.

**ஔ. இறுப்பனவு காலப்பகுதிக்கு இறுப்பனவின் மீது முடிவும் பாவனையாளர்களுடைய முடிபுகள்.**

38. மார்சு 15 ஆம் திகதிக்கு முன்னர் ஆணைக்குழு, இறுப்பனவின் மீதான முடிபின் பின்னரான வேலை நாட்களினுள் தொடங்குகின்ற ஐந்து வருட காலப்பகுதிக்காக இறுப்பனவு மீதான முடிபினை அங்கீகரித்தல் வேண்டும்.

39. இறுப்பனவின் மீதான முடிபின் பின்னரான ஐந்து வேலைநாட்களுக்குள், ஆணைக்குழுவானது–

(i) இறுப்பனவு பற்றிய முடிபின் அனைத்து உரிமம் பெறுநர்களுக்கு அறியப்படுத்தவும் ;

(ii) ஆணைக்குழுவினுடைய இணையத்தளத்தின் மீது முடிபினை அனுப்புதல் ;

(iii) பொதுமக்களின் தகவலுக்காக இறுப்பனவு மீதான முடிபினை வெளியிடுதல்.

## பகுதி IV

**இறுப்பனவு காலப்பகுதியின் போதான இறுப்பனவு சரிக்கட்டுதல்.**

40. ஒவ்வொரு வருடமும்,இறுப்பனவு காலத்தின் போது, பின்வரும் கட்டண ஆக்கக்கூறுகளினது ஆண்டு காலப்பகுதியில் மேற்கொள்ளப்படவுள்ள சரிக்கட்டுதல்களின் அடிப்படையில், ஏப்பிரல் மாதம் 1 திகதியில் இருந்து ஆறு மாத காலத்திலும் மற்றும் ஒற்றோபர்

மாதம் 1 ஆம் திகதியில் இருந்து ஆறு மாத காலத்திலும் முடிவுப் பயன் வாடிக்கையாளர்கள் தொடர்பான கட்டணங்கள் அடங்கிய குறித்த அந்த அட்டவணை இரண்டு தடவைகள் சீராக்கப்படுதல் வேண்டும்.

(அ) சனவரி 1 ஆம் திகதியிலிருந்து ஆரம்பிக்கும் ஓராண்டு காலம் ;

(i) மின்சார கடத்துகை அனுமதிக்கப்பட்ட இறைவரி மற்றும் தொகை மின்சார விநியோக இயக்கச் செயற்பாடுகள் வர்த்தக அனுமதிக்கப்பட்ட வருமான சீராக்கல்கள் ;

(ii) மின்சார வழங்கல் வருமானம் மற்றும் மின்சார சேவை சில்லறை இறுப்பனவு சரிக்கட்டுதல் .

(ஆ) ஆறு மாத காலத்தில்: (ஏப்பிரல் 01 ஆம் திகதியில் இருந்து தொடங்கும்).

(i) தொகை மின்சார விநியோகக் இறுப்பனவு எதிர்வுகூறல் சீராக்கல் ;

(ii) (ABST) எதிர்வுகூறல்.

(இ) ஆறு மாத காலத்தில்: (ஒற்றோபர் 01 ஆம் திகதியில் இருந்து தொடங்கும்).

(i) மானியங்கள் சீராக்கல்கள்

(ii) தொகை மின்சார விநியோக இறுப்பனவு எதிர்கூறல் சீராக்கல்கள், மற்றும்

(iii) (ABST) ஏபிஎஸ்ரி எதிர்வு கூறல்.

41. ஒரே மாதிரியான தேசிய இறுப்பனவு (UNT) செயற்படுத்தப்படும் பட்சத்தில், ஒவ்வொரு மூன்று மாத காலப்பகுதிக்கான முன்-பிந்திய நட்டஈட்டுத் தொகைகள், கட்டண முறையியலுக்கு இணங்க கணிப்பிடப்பட்டு குறித்த மின்சார வழங்கல் உரிமம் பெறுநர்களுக்கு மின்சார விநியோக உரிமம் பெறுநர்களுக்கும் செலுத்தப்படுதல் வேண்டும்.

42. ஆணைக்குழு, இறுப்பனவு காலப்பகுதியின் ஒவ்வொரு ஆண்டினதும் சனவரி மாதத்தின் இறுதி வேலை நாளுக்கு முன்னர், அந்த ஆண்டில் மேற்கொள்ளப்படவுள்ள மீளாய்வுகள் மற்றும் சரிக்கட்டுதல்கள் அனைத்துக்குமான பஞ்சாங்கத்தினை பிரகடனப்படுத்தி, அதனை உரிமம் பெறுநர்களுக்கும் அறிவிக்கவும் அத்துடன், அத்தகைய கலண்டர் ஆண்டு விபரத்தை தனது இணையத்தளத்தில் பிரசுரிக்கவும் வேண்டும்.

**ஏப்ரல் மாதம் 1 ஆம் திகதியில் இருந்து ஆரம்பிக்கின்ற ஆறு மாத காலப்பகுதியின் போதான இறுப்பனவு சரிக்கட்டுதல்கள்.**

**க. தொகை மின்சார விநியோக இறுப்பனவு எதிர்வுகூறல் சரிக்கட்டுதல்கள்.**

43. மின்சார கடத்துகை உரிமம் பெறுநர் விரிவான இறுப்பனவு மீளாய்வு நடைமுறைக்கு இணங்க, தொகை மின்சார விநியோகக் கட்டண எதிர்வுகூறல் சரிக்கட்டுதல்களை அங்கீகாரத்திற்காக ஆணைக்குழுக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

44. இறுப்பனவுகாலப்பகுதியின் ஒவ்வொரு ஆண்டினதும் ஒற்றோபர் 1 ஆம் திகதியில் தொடங்குகின்ற ஆறு மாத காலத்திற்கான தொகை மின்சார விநியோக இறுப்பனவு எதிர்வுகூறல்கள் பற்றிய சரிக்கட்டுதல்கள் அந்தக் கட்டண காலப்பகுதியின் அந்தந்த ஆண்டினது மே மாதத்தின் முதல் வேலை நாளுக்கு முன்னர் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

45. சமர்ப்பணத்தில்:

(அ) குறித்த இறுப்பனவு காலப்பகுதியினைத் தொடர்ந்து வரும் இரண்டு ஆறு மாத காலங்களுக்கான மின்சார உற்பத்தி ஆகுசெலவுகள் பற்றிய எதிர்வுகூறல் சரிக்கட்டுதல்களும்; அத்துடன்

(ஆ) இறுப்பனவு முறையியலின் விவரங்களுக்கு இணங்க, தொடர்ந்து வருகின்ற ஆறு மாத காலப்பகுதியில் பிரயோகிக்கப்பட வேண்டும் எனும் தொகை மின்சார விநியோகக் கொடுக்கல்வாங்கல்கள் கணக்கில் பிரதிபலித்துக் காட்டப்பட்டவாறான உண்மையான தொகை மின்சார விநியோக கட்டணத்திற்கும் எதிர்வுகூறலுக்கும் இடையிலுள்ள வித்தியாசங்களின் நட்டஈட்டுத்தொகை விபரமும் உள்ளடங்கியிருத்தல் வேண்டும்.

46. சமர்ப்பணத் திகதிக்கும் மே மாதத்தின் இறுதி வேலை நாளுக்கும் இடையில் ஆணைக்குழுவானது:

(அ) அங்கீகாரத்திற்கான சமர்ப்பணம் கிடைக்கப்பெற்று 24 மணித்தியாலங்களுக்குள் அதனை தனது இணையத்தளத்தில் அனுப்புதல் வேண்டும் ;

(ஆ) ஆணைக்குழு தேவைப்படுத்தலாம் எனும் ஏதேனும் விளக்கம், திருத்தம், சேர்த்தல் என்பன இருப்பின், அவை தொடர்பில் உரிமம் பெறுநருக்கு எழுத்திலான ஒரு வேண்டுகோளை விடுக்கவும் மற்றும், அவற்றை தனது இணையத்தளத்தில் பிரசுரிக்கவும் ; அத்துடன்

(இ) அத்தகைய வேண்டுகோள் கிடைக்கப்பெற்ற திகதியிலிருந்து ஐந்து வேலை நாட்களுக்குள் பதிலளிக்குமாறு மின்சார கடத்துகை உரிமம்பெற்ற வரைக் கோரி வேண்டுகோளை விடுக்கவும் வேண்டும்.

47. ஆணைக்குழு, குறித்த இறுப்பனவுகாலப்பகுதியினை தொடர்ந்து வருகின்ற ஆறு மாத காலத்திற்கான குறித்த தொகை மின்சார விநியோக இறுப்பனவு எதிர்வுகூறல் சீராக்கல்கள் தொடர்பான நகல் தீர்மானத்தை மே மாதத்தின் இறுதி வேலை நாளுக்கு முன்னர் அங்கீகரிக்க வேண்டும் என்பதுடன், அத்தகைய அங்கீகாரத்தின் 24 மணித்தியாலங்களுக்குள்:

(அ) ஆணைக்குழுவினுடைய இணையத்தளத்தின் மீது நகல் முடிபினை அனுப்புதல்; அத்துடன்

(ஆ) குறித்த அந்த நகல் தீர்மானம் தொடர்பில் ஆணைக்குழுவுக்கு கிடைக்கும் கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் முதலியனவற்றை பத்து வேலை நாட்களுக்குள் பொதுமக்களுக்கும் மற்றும் உரிமம் பெற்ற அனைத்து தரப்புகளுக்கும் அறியப்படுத்தவும் வேண்டும்.

48. ஆணைக்குழு, ஒற்றோபர் மாதம் 1 ஆம் திகதியில் தொடங்குகின்ற கட்டண காலத்தைத் தொடர்ந்து வரும் ஆறு மாத காலத்திற்கான தொகை மின்சார விநியோகக் கட்டண எதிர்வுகூறல் சீராக்கல்கள் தொடர்பான அந்த நகல் தீர்மானத்தை யூலை மாதம் 15 ஆந் திகதிக்கு முன்னர் அங்கீகரிக்க வேண்டும் என்பதுடன், அந்த அங்கீகாரத்தின் ஐந்து வேலை நாட்களுக்குள், ஆணைக்குழு:

(அ) குறித்த கட்டண காலத்தின் தொடர்ந்து வருகின்ற ஆறு மாத காலத்திற்கான தொகை மின்சார விநியோகக் கட்டணங்கள் எதிர்வுகூறல் சீராக்கல்கள் தொடர்பான அந்தத் தீர்மானத்தின் அங்கீகாரத்தையும் மற்றும் அந்த இறுப்பனவு காலத்தை தொடர்ந்து வருகின்ற ஆறு மாத காலத்திற்கான தொகை மின்சார விநியோகக் கொடுக்கல்வாங்கல்கள் கணக்கில் காணப்படுகின்ற திரண்ட வித்தியாசங்களின் நட்டஈட்டுத் தொகைகளின் விபரங்கள் பற்றி அனுமதிப்பத்திரம் பெற்ற சகல தரப்புகளுக்கும் அறியப்படுத்தவும், மற்றும்

(ஆ) கட்டண காலத்தைத் தொடர்ந்து வருகின்ற ஆறு மாத காலத்திற்கான தொகை மின்சார விநியோகக் இறுப்பனவு எதிர்வுகூறல் சரிக்கட்டல்கள் தொடர்பான அந்தத் தீர்மானத்தையும் மற்றும் அந்தக் கட்டண காலத்தைத் தொடக்ஷந்து வருகின்ற ஆறு மாத காலத்திற்கான தொகை மின்சார விநியோகக் கொடுக்கல்வாங்கல்கள் கணக்கில் காணப்படுகின்ற திரண்ட நட்டஈட்டுத் தொகைகளின் விபரங்களையும் தனது இணைத்தளத்தில் பிரசுரிக்கவும் வேண்டும்.

**ங. இறுப்பனவு காலப்பகுதியின் போது இரண்டாவது ஆறு மாத காலப்பகுதிக்கான முடிவுப்பயன் பாவனையாளர்களுக்கு இறுப்பனவு அட்டவணைக்கான அட்டவணை பற்றிய சரிக்கட்டுதல்கள்.**

49. முடிவுப்பயன் பாவனையாளர்களுக்கான கட்டணங்கள் அடங்கிய அந்த அட்டவணைக்கான சரிக்கட்டுதல் :-

(அ) இயைபான உரிமம் பெறுநரினால் தயாரிக்கப்பட்டு மே மாதத்தின் முதலாவது வேலை நாளுக்கு முன்னர்; அல்லது

(ஆ) செத்தெம்பர் 15 ஆம் திகதிக்கு முன்னர் ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

50. ஆணைக்குழு ஒற்றோபர் மாதம் 1 ஆம் திகதியைத் தொடர்ந்து ஆரம்பமாகும் ஆறு மாத காலப்பகுதிக்காக இறுப்பனவு சரிக்கட்டுதலின்மீது முடிபினை செத்தெம்பர் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் அங்கீகரித்தல் வேண்டும்.

51. தொடர்ந்து வருகின்ற அந்த ஆறு மாத காலப்பகுதிக்காக இறுப்பனவு சரிக்கட்டுதலின் தீர்மானத்தினது அங்கீகாரத்தின் பின்னர், இரண்டு வேலை நாட்களுக்குள் ஆணைக்குழு:

(அ) இறுப்பனவு சரிக்கட்டுதலின் மீது முடிவின் அங்கீகரித்தலை அனைத்து உரிமம் பெறுநர்களுக்கும் அறியப்படுத்தவும் ;

(ஆ) இறுப்பனவு சீராக்கல் மீதான அந்தத் தீர்மான விபரங்களை தனது இணையத்தளத்தில் பிரசுரிக்கவும்; அத்துடன்

(இ) இறுப்பனவு சரிக்கட்டுதல் மீதான முடிபை பொதுமக்களின் தகவலுக்காக வெளியிடுதல் வேண்டும்.

**ச. எதிர்வுகூறப்பட்டு சரிக்கட்டப்பட்ட தொகை மின்சார விநியோக இறுப்பனவு** (ABST)

52. எதிர்வுகூறப்பட்டு சரிக்கட்டப்பட்ட தொகை மின்சார விநியோக இறுப்பனவு (ABST) இறுப்பனவு முறையியலுக்கு இணங்க ஒரு சீரான தேசிய இறுப்பனவை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவைப்படுத்தப்படும்.

53. ஆணைக்குழு, ஒற்றோபர் மாதம் 1 ஆம் திகதியைத் தொடர்ந்து ஆரம்பமாகும் ஆறு மாத காலப்பகுதியின் போது தொகை மின்சார விநியோகத் தரப்புகள் ஒவ்வொருவருக்காகவும் செலவுப்பட்டியலிடும் ஒவ்வொரு மின்சாரப் பகிர்ந்தளிப்பு உரிமம் பெறுநருக்குமான எதிர்வுகூறப்பட்டு சரிக்கட்டப்பட்ட தொகை மின்சார விநியோக இறுப்பனவுகளின் மீது முடிபை செத்தெம்பர் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் அங்கீகரித்தல் வேண்டும் என்பதுடன், ஆணைக்குழு:

(அ) அத்தகைய அங்கீகாரத்தை மின்சார கடத்துகை உரிமம் பெறுநருக்கும் மின்சாரப் பகிர்ந்தளிப்பு உரிமம் பெறுநருக்கும் அறியப்படுத்தவும் ; அத்துடன்

(ஆ) அந்தத் தீர்மான விபரங்களை தனது இணையத்தளத்தில் பிரசுரிக்கவும் வேண்டும்.

**ஒற்றோபர் மாதம் 1 ஆம் திகதியில் தொடங்கும் ஆறு மாத காலத்திற்கான கட்டண சரிக்கட்டுதல்கள்.**

**ஞ. மானியங்களுக்கான சரிக்கட்டுதல்கள்.**

54. ஆணைக்குழு, அடுத்துறுகின்ற ஆண்டிற்கு திறைசேரியிடமிருந்து தேவைப்படுத்தப்படும் எதிர்பார்க்கப்பட்ட மானியங்கள் தொகை அளவை உள்ளடக்குகின்ற இறுப்பனவு மீளாய்வின் போது சமர்ப்பிக்கப்பட்ட மானியத்தொகை எதிர்வுகூறல்கள் அடங்கிய அறிக்கையின் ஒரு இற்றைப்படுத்தலாக விளங்குகின்ற மானியத் தொகை எதிர்வுகூறல்கள் சீராக்கல் தொடர்பான ஒரு அறிக்கையையும் மற்றும் அதனைத் தொடர்ந்து வரும் ஆண்டிற்கான ஒரு எதிர்வுகூறல் ஆவணத்தையும் யூன் மாதத்தின் முதல் ஐந்து வேலை நாட்களுக்குள் தயாரித்து வழங்க வேண்டும். இந்த அறிக்கை பின்வரும் விடயங்களின் அடிப்படையில் அமைதல் வேண்டும்.

(அ) மின்சார கடத்துகை உரிமம் பெறுநரினால் குறித்த ஆண்டிற்காக முன்வைக்கப்படும் தொகை மின்சார விநியோகக் இறுப்பனவு எதிர்வுகூறல் (கட்டண முறையியலில் எதிர்வுகூறப்படாத) ;

(ஆ) மின்சார கடத்துகை மற்றும் மின்சாரப் பகிர்ந்தளிப்பு இறுப்பனவு மீள் ஏற்பாட்டிலிருந்து வருகின்ற சாத்தியமான வருமானம் ;

(இ) மின்சாரப் பகிர்ந்தளிப்பு உரிமம் பெறுநர்கள் மற்றும் மின்சார கடத்துகை உரிமம் பெறுநர்கள் ஆகியன தொடர்பாக கட்டண முறையியலில் குறிப்பிடப்பட்டுள்ள வருமானக் கட்டுப்பாட்டு சூத்திரங்களின் அடிப்படையில் சரிக்கட்டப்பட்ட வருமானம் ;

(ஈ) இந்தக் கோட்பாட்டிற்கு ஏற்புடைய எதிர்வுகூறப்பட்டுள்ள கட்டணங்களின் பெறுபேறுகள் ;

(உ) எதிர்வருகின்ற ஆண்டு தொடர்பில் சரிக்கட்டப்பட்ட சந்தை எதிர்வுகூறல் (உரிமம் பெறுநரின் சமர்ப்பணங்களின் அடிப்படையிலான கேள்வி மற்றும் பாவனையாளர்களின் எண்ணிக்கை; அத்துடன்

(ஊ) ஆண்டிற்காக அங்கீகரிக்கப்பட்டு அனுமதிக்கப்பட்ட இழப்பு.

55. ஆணைக்குழு, இணையத் தளத்தில் மதிப்பீடு செய்யப்பட்ட நகல் இறுப்பனவை பிரசுரித்தல் வேண்டும்.

56. ஆணைக்குழு, மானியத் தொகை எதிர்வுகூறல் சரிக்கட்டுதல்கள் தொடர்பான அறிக்கையை யூன் மாதம் முதலாவது வேலை நாளுக்கு முன்னர் திறைசேரிக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

57. ஆணைக்குழு இறுப்பனவு காலப்பகுதிக்கான மானியத் தொகைத் தேவைப்பாடுகள் பற்றி திறைசேரிக்கு அறிவித்த உடனடுத்துப் பின்னர், தேசிய வரவுசெலவுத்திட்டத் தயாரித்தலில் அந்த மானியத் தொகைகளை உள்ளடக்குமாறு திரைசேரிக்கு ஒரு வேண்டுகோளை விடுத்தல் வேண்டும்.

58. மானியத் தொகைகளின் அங்கீகாரத்திற்காக திரைசேரியினால் கோரப்படும் ஏதேனும் மேலதிகத் தகவல்களை அல்லது விளக்கங்களை ஆணைக்குழு உடனடியாக யூலை மாதத்தின் முதலாவது வேலை நாளுக்கு முன்னர் வழங்குதல் வேண்டும்.

**ட. மின்சார கடத்துகை அனுமதிக்கப்பட்ட இறைவரி மற்றும் தொகை மின்சார விநியோக மற்றும் செயற்பாடுகள் அனுமதிக்கப்பட்ட இறைவரி.**

59. மின்சார கடத்துகை உரிமம் பெறுநர், விரிவான கட்டண மீளாய்வு சீராக்கல் நடைமுறைகளுக்கு இணங்க, மின்சார கடத்துகை அனுமதிக்கப்பட்ட வருமானம் மற்றும் தொகை மின்சார விநியோக இயக்கச் செயற்பாடுகள் வர்த்தக அனுமதிக்கப்பட்ட வருமான சீராக்கள்கள் ஆகிய விடயங்களை ஆணைக்குழுவின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பித்தல் வேண்டும்.

(அ) மின்சார கடத்துகை அனுமதிக்கப்பட்ட இறைவரி மற்றும் தொகை வழங்கல் மற்றும் தொழில் தொழிற்பாடுகள் வர்த்தக அனுமதிக்கப்பட்ட இறைவரி சரிக்கட்டுதல்கள் குறித்த கட்டண காலப்பகுதியினது 1ஆம், 2ஆம், 3ஆம் மற்றும் 4ஆம் ஆண்டுகளின் யூலை மாதத்தின் இறுதி வேலை நாளுக்கு முன்னர் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்;

(ஆ) ஓகத்து மாதத்தின் முதலாவது வேலை நாளுக்கு மற்றும் அந்த சமர்ப்பண நாளுக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் ஆணைக்குழு:

(i) அங்கீகாரத்திற்காக சமர்ப்பணம் கிடைக்கப்பெற்று 24 மணித்தியாலங்களுக்குள் தனது இணையத்தளத்தில் பிரசுரித்தல் வேண்டும் ;

(ii) ஆணைக்குழு தேவைப்படுத்தலாம் எனும் எவையேனும் விளக்கங்கள், திருத்தம், சேர்த்தல் முதலியன இருப்பின், அவை தொடர்பில் எழுத்திலான வேண்டுகோளை உரிமம் பெறுநருக்கு விடுக்கவும், அத்தகைய விபரங்களை தனது இணையத்தளத்தினுள் பிரசுரிக்கவும் வேண்டும் ;

(iii) ஒரு வேண்டுகோள் கிடைக்கப்பெற்ற திகதியிலிருந்து ஐந்து வேலை நாட்களுக்குள், கடத்துகை உரிமம் பெறுநர் ஆணைக்குழு எழுத்தில் பதிலளிக்க வேண்டும்.

(இ) ஆணைக்குழு, அனுமதிக்கப்பட்ட அந்த நகல் இறைவரிகளை வருடத்தின் ஆகஸ்ட் மாதம் இறுதி வேலை நாளுக்கு முன்னர் அங்கீகரித்தல் வேண்டும் என்பதுடன், அவ்வாறு அங்கீகரித்த பின்னர், 24 மணித்தியாலங்களுக்குள், ஆணைக்குழு:

(i) ஆணைக்குழுவினுடைய இணையத்தளத்தின் மீது நகல் முடிபை பிரசுரித்தல் வேண்டும்; அத்துடன்

(ii) அந்த நகல் முடிபு தொடர்பில் தனக்கு கிடைக்கும் கருத்துரைகள், அவதானிப்புரைகள் முதலியவற்றை, அனைத்து உரிமம் பெறுநர்களுக்கும் பொதுமக்களும் இருபது வேலை நாட்கள் அடங்கிய ஒரு காலப்பகுதியினுள் அறியப்படுத்தவும் வேண்டும்.

(ஈ) ஆணைக்குழு, மின்சார கடத்துகை அனுமதிக்கப்பட்ட இறைவரி மற்றும் தொகை மின்சார விநியோக மற்றும் செயற்பாடுகள் வர்த்தக அனுமதிக்கப்பட்ட வருமதிகள் ஆகிய தொடர்பான முடிபினை ஒக்றோபர் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் அங்கீகரித்தல் வேண்டும். அவ்வாறு அங்கீகரித்த பின்னர் ஐந்து வேலை நாட்களுக்குள்:

(i) மின்சார கடத்துகை உரிமம் பெறுநருக்கு அறியப்படுத்துதல் வேண்டும்; அத்துடன்

(ii) ஆணைக்குழுவினுடைய இணையத்தளத்தின் மீது முடிபினை பிரசுரித்தல் வேண்டும்.

**ண. மின்சாரப் பகிர்ந்தளிப்பு அனுமதிக்கப்பட்ட இறைவரி மற்றும் சில்லறைக் கட்டணசேவை இறுப்பனவு சரிக்கட்டுதல்.**

60. மின்சாரப் பகிர்ந்தளிப்பு உரிமம் பெறுநர் விரிவான கட்டண மீளாய்வு சீராக்கல் நடைமுறைக்கு இணங்க, பின்வருவன பற்றி இழப்புக் காரணி சீராக்கல் நடைமுறைக்கு இணங்க, பின்வருவன பற்றிய இழப்புக் காரணி சீராக்கல் அடங்கிய மின்சாரப் பகிர்ந்தளிப்பு அனுமதிக்கப்பட்ட வருமானத்தையும், மின்சார சேவை சில்லறைக் கட்டணத்தையும் ஆணைக்குழுவின் அங்கீகாரத்தையும் ஆணைக்குழுவின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்க வேண்டும்.

(அ) மின்சாரப் பகிர்ந்தளிப்பு அனுமதிக்கப்பட்ட இறைவரி மற்றும் மின்சார சேவை சில்லறைக் கட்டண சீராக்கல் ஆகியன இறுப்பனவு முறையியலில் உள்ளடக்கப்பட்டுள்ள இறைவரிக் கட்டுப்பாட்டு சுத்திரங்களுக்கு இணங்க

இறுப்பனவு காலப்பகுதியின் 1 ஆம், 2ஆம், 3ஆம் மற்றும் 4ஆம் ஆண்டுகளின் யூலை மாதம் இறுதி வேலை நாளுக்கு முன்னர் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

(ஆ) ஓகத்து மாதத்தின் இறுதி வேலை நாளுக்கு மற்றும் அந்த சமர்ப்பண நாளுக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் ஆணைக்குழு:

(i) அங்கீகாரத்திற்காக சமர்ப்பணம் கிடைக்கப்பெற்று 24 மணித்தியாலங்களுக்குள் தனது இணையத்தளத்தில் பிரசுரிக்கவும்; அத்துடன்

(ii) ஆணைக்குழு தேவைப்படுத்தலாம் எனும் ஏதேனும் விளக்கம், திருத்தம், சேர்த்தல்கள் முதலியன இருப்பின், உரிமம் பெறுநருக்கு எழுத்திலான ஒரு வேண்டுகோளை விடுக்கவும், அவற்றை தனது இணையத்தளத்தினுள் பிரசுரிக்கவும் வேண்டும், அத்துடன்

(இ) பகிர்ந்தளிப்பு உரிமம் பெறுநர் அத்தகைய வேண்டுகோள் கிடைக்கப்பெற்ற திகதியிலிருந்து ஐந்து வேலை நாட்களுக்குள், ஆணைக்குழுவிற்கு பதிலளித்தல் வேண்டும்.

(ஈ) ஆணைக்குழு, மின்சாரப் பகிர்ந்தளிப்பு அனுமதிக்கப்பட்ட வருமான இறைவரி மற்றும் மின்சார சேவை சில்லறை இறுப்பனவு சரிக்கட்டு என்பன தொடர்பான நகல் தீர்மானத்தை ஆகஸ்ட் மாதம் இறுதி வேலை நாளுக்கு முன்னர் அங்கீகரித்தல் வேண்டும். அவ்வாறு அங்கீகரித்த பின்னர், 24 மணித்தியாலங்களுக்குள், ஆணைக்குழு:

(i) அத்தகைய நகல் தீர்மான விபரங்களை தனது இணையத்தளத்தில் பிரசுரிக்கவும், அத்துடன்,

(ii) அந்த நகல் தீர்மானம் தொடர்பில் தனக்கு கிடைக்கும் கருத்துரைகள், அவதானிப்புரைகள் முதலியவற்றை, அனுமதிப்பத்திரம் பெற்ற சகல தரப்புகளுக்கும் மற்றும் பொதுமக்களும் இருபது வேலை நாட்கள் அடங்கிய ஒரு காலப்பகுதியினுள் அறியப்படுத்தவும் வேண்டும்.

(உ) ஆணைக்குழு, மின்சார பகிர்ந்தளிப்பு அனுமதிக்கப்பட்ட வருமானம் மற்றும் மின்சார சேவை சில்லறை இறுப்பனவு சரிகட்டுதல்கள் என்பன தொடர்பான தீர்மானத்தை ஒக்றோபர் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் அங்கீகரித்தல் வேண்டும். அவ்வாறு அங்கீகரித்த பின்னர் ஐந்து வேலை நாட்களுக்குள்:

(i) மின்சார கடத்துகை உரிமம் பெறுநருக்கு அறியப்படுத்தவும், அத்துடன்

(ii) அத்தகைய தீர்மான விபரங்களை தனது இணையத்தளத்தினுள் பிரசுரிக்கவும் வேண்டும்.

**த. தொகை மின்சார விநியோக இறுப்பனவு எதிர்வு கூறல் சரிபார்க்கப்படுதல்.**

61. மின்சார கடத்துகை உரிமம் பெறுநர் இறுப்பனவு மீளாய்வு மற்றும் விரிவாக்கப்பட்டு சரிபார்க்கப்படுதல் நடைமுறைகளுக்கு இணங்க, பின்வரும் விடயங்கள் தொடர்பான தொகை மின்சார வழங்கல் இறுப்பனவு எதிர்வுகூறல் பற்றிய சீராக்கல்களை ஆணைக்குழுவின் அங்கீகாரத்திற்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

(அ) இறுப்பனவு காலப்பகுதியின் 2 ஆம், 3 ஆம், 4 ஆம் மற்றும் 5 ஆம் ஆண்டுகளின் ஏப்பிறல் 1 ஆம் திகதியில் தொடங்குகின்ற ஆறு மாத காலப்பகுதிக்கு தொகை மின்சார விநியோக இறுப்பனவு எதிர்வுகூறல் சரிப்படுத்தல்கள் அந்தக் கட்டண காலப்பகுதியின் அந்தந்த ஆண்டிற்கு முன்னருள்ள ஆண்டின் ஒக்றோபர் மாதம் இறுதி வேலை நாளுக்கு முன்னர் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும் ;

(ஆ) அந்த ஒவ்வொரு சமர்ப்பணத்திலும்:

(i) இறுப்பனவு காலப்பகுதியின் இரண்டு ஆறு மாத காலப்பகுதிக்காக மின்சார பிறப்பாக்க ஆகுசெலவுகள் எதிர்வுகூறல் சீராக்கலும்; அத்துடன்

(ii) கட்டண முறையியலின் விவரங்களுக்கு இணங்க, தொடர்ந்து வரும் ஆறு மாத காலப்பகுதியில் பிரயோகிக்க வேண்டும் எனும் தொகை மின்சார விநியோகக் கொடுக்கல்வாங்கல்கள் கணக்கில் பிரதிபலித்து

காட்டப்பட்டவாறு உண்மையான தொகை மின்சார விநியோகக் கட்டணங்களுக்கும் மற்றும் எதிர்வுகூறலுக்கும் இடையில் நிலவும் வித்தியாசங்களின் நஷ்டஈட்டுத் தொகை விபரங்களும் உள்ளடங்க வேண்டும்.

(இ) நவம்பர் மாதத்தின் சமர்ப்பண நாளுக்கும் இறுதி வேலை நாளுக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில், ஆணைக்குழு:

(i) அங்கீகாரத்திற்காக அத்தகைய சமர்ப்பணம் கிடைக்கப்பெற்று 24 மணித்தியாலங்களுக்குள் அதனுடைய இணையத்தளத்தில் பிரசுரிக்கவும்; அத்துடன்

(ii) ஆணைக்குழு தேவைப்படுத்தலாம் எனும் எவையேனும் விளக்கங்கள், திருத்தங்கள், சேர்த்தல்கள் முதலியன இருப்பின்,உரிமம் பெறுநருக்கு எழுத்திலான ஒரு வேண்டுகோளை விடுக்கவும், அவற்றை தனது இணையத்தளத்தினுள் பிரசுரிக்கவும், அத்துடன்

(ஈ) அத்தகைய கோரல் கிடைக்கப்பெற்ற நாளிலிருந்து ஐந்து வேலை நாட்களுக்குள் எழுத்தில் பதிலளிக்குமாறு வேண்டுகோளை மின்சார கடத்துகை உரிமம் பெறுநருக்கு தரப்புக்கு விடுக்கவும் வேண்டும்.

(உ) ஆணைக்குழு, இறுப்பனவு காலப்பகுதியின் ஆறு மாத காலத்திற்கான தொகை மின்சார விநியோகக் கட்டணங்களின் எதிர்வுகூறல் சரிக்கட்டுதல்கள் தொடர்பான நகல் முடிபினை அந்த வருடத்தின் நவம்பர் மாதத்தினது இறுதி வேலை நாளுக்கு முன்னர் அங்கீகரித்தல் வேண்டும் என்பதுடன், அத்தகைய அங்கீகாரத்தின் 24 மணித்தியாலங்களுக்குள்:

(i) இணையத்தளத்தின் மீது தனது முடிபை பிரசுரிக்கவும்; அத்துடன்,

(ii) அந்த நகல் தீர்மானம் தொடர்பில் தனக்கு கிடைக்கும் கருத்துரைகள், அவதானிப்புரைகள் முதலியவற்றை, பத்து வேலை நாட்கள் அடங்கிய ஒரு காலப்பகுதியினுள் பொதுமக்களும் அனைத்து உரிமம் பெறுநர்களுக்கும் அறியப்படுத்தவும் வேண்டும்.

(ஊ) ஆணைக்குழு, ஏப்பிறல் மாதம் 1 ஆந் திகதியன்று தொடங்குகின்ற இறுப்பனவு காலப்பகுதியின் முதல் ஆறு மாத காலப்பகுதிக்கான தொகை மின்சார வழங்கல் இறுப்பனவு எதிர்வுகூறல் சரிக்கட்டுதல்கள் பற்றிய முடிபை அங்கீகரித்தல் வேண்டும்,

(i) அந்த கட்டண காலத்தின் ஆறு மாத காலத்திற்கான தொகை மின்சார விநியோகக் கட்டணங்களினது எதிர்வுகூறல் சீராக்கல் தொடர்பான தீர்மானத்தின் அங்கீகாரத்தையும் மற்றும் அந்தக் கட்டண காலத்தின் ஆறு மாத காலத்திற்கான தொகை மின்சார விநியோகக் கொடுக்கல்வாங்கல் கணக்கில் காணப்படும் திரண்ட வித்தியாசங்களின் நஷ்டஈட்டுத் தொகை விபரங்களையும் உரிமம் பெறுநர்களுக்கும் அறியப்படுத்தவும்; அத்துடன்

(ii) அந்த கட்டண காலத்தின் ஆறு மாத காலத்திற்கான தொகை மின்சார விநியோகக் இறுப்பனவு எதிர்வுகூறல் சரிப்படுத்தல்கள் தொடர்பில் தீர்மான விபரங்களையும் மற்றும் அந்தக் கட்டண காலத்தின் ஆறு மாத காலத்திற்கான தொகை மின்சார விநியோகக் கொடுக்கல்வாங்கல் கணக்கில் காணப்படுகின்ற வித்தியாசங்களின் திரண்ட நஷ்டஈட்டுத் தொகை விபரங்களையும் தனது இணையத் தளத்தில் பிரசுரித்தலும் வேண்டும்.

**ந. இறுப்பனவு காலப்பகுதியின்போது முதல் ஆறு மாத காலப்பகுதியின் போது முடிவுப் பயன் பாவனையாளர்களுக்காக இறுப்பனவு அட்டவணைக்கான சரிக்கட்டுதல்கள்.**

62. முடிவுப் பயன் பாவனையாளருக்கான கட்டணங்கள் அடங்கிய குறித்த அட்டவணைக்கான சீராக்கல்:

(அ) இயைபான உரிமம் பெறுநரினால் தயாரிக்கப்பட்டு ஒவ்வொரு ஆண்டினதும் ஒற்றோபர் மாதத்தின் இறுதி வேலை நாளுக்கு முன்னர்; அல்லது

(ஆ) ஒவ்வொரு ஆண்டினதும் மார்ச் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

63. ஆணைக்குழு, ஏப்ரல் மாதம் 01 ஆம் திகதியிலிருந்து தொடங்கும் முதல் ஆறுமாத காலப்பகுதிக்கான இறுப்பனவு சரிக்கட்டப்படுதல் முடிபை ஒவ்வொரு ஆண்டினதும் மார்ச் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் அங்கீகரித்தல் வேண்டும்.

64. ஆறு மாத காலப்பகுதிக்கான அந்த இறுப்பனவு சரிக்கட்டுதலின்மீது அங்கீகாரத்தின் பின்னர், இரண்டு வேலை நாட்களுக்குள், ஆணைக்குழு:

(அ) இறுப்பனவு சரிக்கட்டுதலின் அங்கீகாரத்தை உரிமம் பெறுநருக்கு அறியப்படுத்தவும் ;

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட அந்த இறுப்பனவு சரிக்கட்டப்படுதல் பற்றிய விபரங்களை தனது இணையத்தளத்தில் பிரசுரிக்கவும் ; அத்துடன்

(இ) இறுப்பனவு சரிக்கட்டப்படுதல் தொடர்பான தீர்மானத்தை வெளியிடவும் வேண்டும்.

**ப. எதிர்வுகூறப்பட்டு சரிக்கப்பட்ட தொகை மின்சார விநியோக இறுப்பனவு (ABST)**

65. எதிர்வுகூறப்பட்டு சரிக்கட்டப்பட்ட தொகை மின்சார விநியோகஇறுப்பனவானது இறுப்பனவு முறையியலுக்கு இணங்க ஒரேமாதிரியான தேசிய இறுப்பனவு முறையை நடைமுறைப்படுத்தப்படுவதற்குத் தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்.

66. ஆணைக்குழு, ஏப்ரல் மாதம் 1 ஆம் திகதியன்று தொடங்கி ஆரம்பமாகும் ஆறு மாத காலப்பகுதியின் போது தொகை விநியோக கட்சிக்காரர்கள் தத்தமது ஒவ்வொரு விடயத்திற்கும் செலவுப்பட்டியலிடும் ஒவ்வொரு மின்சாரப் பகிர்ந்தளிப்புக் கட்சிக்காரருக்குமான எதிர்வுகூறப்பட்டு சீராக்கப்பட்ட தொகை மின்சார விநியோகக் இறுப்பனவுகள் தொடர்பான தீர்மானத்தை மார்ச் 15 ஆம் திகதிக்கு முன்னர் அங்கீகரிக்க வேண்டும் என்பதுடன், அந்த அங்கீகாரத்தின் பின்னர் ஐந்து வேலை நாட்களுக்குள்:

(அ) அங்கீகாரம் பற்றி மின்சார கடத்துகை உரிமம் பெறுநருக்கும் மின்சாரப் பகிர்ந்தளிப்பு உரிமம் பெறுநர்களுக்கும் அறியப்படுத்தவும், அத்துடன்

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட முடிபை தனது இணையத்தளத்தில் பிரசுரிக்கவும், அத்துடன்

**ம. ஒரேமாதிரியான தேசிய இறுப்பனவின் (UNT) அமுலாக்கத்திற்கான நஷ்டஈட்டுக் கணிப்பீடு வரையறை**

67. மின்சாரப் பகிர்ந்தளிப்பு மற்றும் மின்சார விநியோக உரிமம் பெறுநர்கள் ஒவ்வொருவரும் இறுப்பனவு கட்டண முறையியலில் அடையாளம் காணப்பட்ட நட்டஈட்டிற்கிணங்க குறித்த மின்சாரப் பகிர்ந்தளிப்பு உரிமம் பெறுநருக்கும் மற்றம் குறித்த மின்சார விநியோக உரிமம் பெறுநருக்கும் செலுத்தவேண்டிய நஷ்டஈட்டு கணிப்பீட்டு வரையறையின் நிமித்தம் தேவைப்படுத்தப்படும் தகவல்களை சனவரி, ஏப்ரல், யூலை, ஒக்றோபர் ஆகிய மாதங்களின் இறுதி வேலை நாளுக்கு முன்னர் வழங்குதல் வேண்டும்.

68. ஆணைக்குழு, அந்த நட்டஈட்டுத் தொகை தொடர்பான தீர்மானத்தை சனவரி, ஏப்ரல், யூலை, ஒக்றோபர் ஆகிய மாதங்களின் 1 ஆம் நாளுக்கு முன்னர் அங்கீகரித்தல் வேண்டும், மற்றும் அந்த அங்கீகாரத்தின் பின்னர், ஐந்து வேலை நாட்களுக்குள்:

**ய. அதிவிசேட நிலைமைகளின் கீழான மீளாய்வு.**

69. மின்சாரப் பகிர்ந்தளிப்பு உரிமம் பெறுநர்களுக்கும் மற்றும் மின்சார கடத்துகை உரிமம் பெறுநர்களுக்கு அதிவிசேட சந்தர்ப்பம் ஒன்று ஏற்படுகின்ற நேரத்தில்:

(அ) அனுமதிக்கப்பட்ட வருமான சுட்டிகள் சூத்திரத்தில் காணப்படும் திரண்ட வித்தியாசமானது ஏதேனும் ஒரு ஆண்டு காலப்பகுதியில் 15% வீதத்தை விஞ்சுகின்ற,

(i) கூடுமான வரையில் சரிக்கப்படுதல்கள் செயல்வலுப்பெறச் செய்ய வேண்டிய ஒவ்வொரு ஆண்டினதும் யூன் மாதம் 30 ஆம் நாள் அளவில் அல்லது அதற்கு முன்னர் அந்த 15% வீதம் விஞ்சப்படுகின்ற,

(ii) குறித்தகட்டண காலத்தின் அடுத்து வருகின்ற ஆண்டு முதல் அந்த சரிக்கப்படுதல்கள் செயல்வலுப் பெறச்செய்யப்பட வேண்டிய யூன் மாதம் 30 ஆம் திகதியின் பின்னர் அந்த 15% வீதம் விஞ்சப்படுகின்ற,

(ஆ) எதிர்பாராத முக்கியமான ஒருதொகை மின்சார விநியோக எதிர்கூறல் வித்தியாசம் நிகழ்கின்ற, அத்துடன்

(இ) ஏதேனும் ஒரு ஆண்டு காலப்பகுதியில் எதிர்பாராத ஒரு நிகழ்வினால் உரிமம் பெறுநருக்கு ஏற்படும் ஆகுசெலவு அந்த ஆண்டின் அனுமதிக்கப்பட்ட வருமானத்தின் 25% வீதத்தை விஞ்சுகின்ற பட்சத்தில்:

குறித்த இறுப்பனவு முறையியலுக்கு இணங்க, அனுமதிக்க வேண்டிய அந்த அதிவிசேட வருமான மீளாய்வை ஆணைக்குழுவின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கலாம்.

70. சமர்ப்பணம் ஆண்டின் போது எந்த நேரத்திலும் முன்வைக்கப்படலாம். ஆணைக்குழு, பஞ்சாங்கத்திற்கு இணங்க பின்வருகின்ற அட்டவணைப்படுத்திய மீளாய்வு அல்லது சரிக்கப்படுதல்கள் பற்றிய நடபடிமுறை பிற்போடப்படும் வரை குறித்த மீளாய்வு அதி விசேடமானது எனக் கருதப்படுதல் வேண்டுமா என்பதை நிர்ணயிக்க வேண்டும்.

71. அதிவிசேட மீளாய்வை நியாயப்படுத்தும் எதிர்பாராத நிகழ்வை இலகுபடுத்த வேண்டிய அனைத்து ஆவணங்களுடனும் சேக்ஷத்து கோரலுக்கான காரணங்களின் அனைத்து முக்கியமான அம்சங்களும் அந்த சமர்ப்பணத்தில் உள்ளடங்கியிருத்தல் வேண்டும்.

72. அங்கீகாரத்திற்காக சமர்ப்பணம் கிடைக்கப்பெற்ற பின்னர் 24 மணித்தியாலங்களுள்குள், ஆணைக்குழு அதனை தனது இணையத்தளத்தில் பிரசுரித்தல் வேண்டும்.

73. ஆணைக்குழு, அத்தகைய சமர்ப்பணம் கிடைக்கப்பெற்று பத்து வேலை நாட்களுக்குள், தான் அந்த அதிவிசேட மீளாய்வு தொடர்பில் தேவைப்படுத்தலாம் எனும் ஏதாவது விளக்கங்கள், திருத்தங்கள் மற்றும் சேர்த்தல்கள் என்பவற்றை வழங்குமாறு உரிமம் பெறுநரை எழுத்திலான ஒரு வேண்டுகோளினூடாக தேவைப்படுத்தலாம்.

74. ஆணைக்குழுவிடமிருந்து அத்தகைய ஒரு வேண்டுகோள் கிடைக்கப்பெற்ற நாளிலிருந்து ஐந்து வேலை நாட்களுக்குள், அந்த உரிமம் பெறுநர் ஆணைக்குழுவின் அத்தகைய எழுத்திலான வேண்டுகோளுக்குப் பதிலளித்தல் வேண்டும்.

75. சமர்ப்பணத்தின் பின்னர் இருபது வேலை நாட்களினுள், ஆணைக்குழுவானது வேண்டுகோளை ஏற்றுக்கொள்வதா அல்லது நிராகரிப்பதா எனத் தீக்ஷமானித்தல் வேண்டும்.

76. ஆணைக்குழு,கோரலை நிராகரிக்கும் பட்சத்தில், அத்தகைய நிராகரித்தலுக்கான காரணங்களை நியாயப்படுத்துதல் வேண்டும் என்பதுடன், ஒரு வேலை நாளுக்குள்,தீர்மானத்தினை தனது இணையத்தளத்தில் பிரசுரிக்கப்படுதலும் வேண்டும்.

77. ஆணைக்குழு, குறித்த கோரலை ஏற்றுக்கொள்ளும் பட்சத்தில், அந்த ஏற்றுக் கொள்ளல் பற்றிய தீர்மானத்திற்கான நியாயப்படுத்தல்களை உள்ளடக்கிய அந்த அதிவிசேட மீளாய்வு தொடர்பான நகல் தீர்மானத்தை அங்கீகரித்தல் வேண்டும். அத்தகைய அங்கீகாரத்தின் பின்னர், 24 மணித்தியாலங்களில், ஆணைக்குழு:

(அ) அந்த நகல் முடிபை தனது இணையத்தளத்தில் பிரசுரித்தல் வேண்டும்; அத்துடன்

(ஆ) அந்த நகல் முடிபு பற்றி ஆணைக்குழுவுக்குக் கிடைக்கின்ற கருத்துரைகள், அவதானிப்புகள் முதலியவற்றை அனுமதிப்பத்திரம் பெற்ற சகல தரப்புகளுக்கும் மற்றும் பொதுமக்களுக்கும் இருபது வேலை நாட்கள் அடங்கிய ஒரு காலப்பகுதியினுள் அறிவித்தலும் வேண்டும்.

78. ஆணைக்குழு, பொதுமக்கள் ஆலோசனைகள் கேட்டறியும் காலம் முடிவு பெற்ற பின்னர் ஐந்து வேலை நாட்களுக்குள், குறித்த அதிவிசேட மீளாய்வு தொடர்பான முடிபை அங்கீகரித்தல் வேண்டும், என்பதுடன்,

(i) அந்த அங்கீகாரம் பற்றி மின்சார கடத்துகை உரிமம் பெறுநருக்கும் மின்சாரப் பகிர்ந்தளிப்பு உரிமம் பெறுநர்களுக்கும் அறியப்படுத்தலும், அத்துடன்

(ii) அத்தகைய தீர்மான விபரங்களை தனது இணையத்தளத்தில் பிரசுரித்தலும் வேண்டும்.

8- 453

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.